Registered at the G. P. O. as a Newspaper

விலே சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ ஆனி 31 ஆம் நாள் ஸபர் 1 (15-7 61) | சனிக்கிழமை | இதழ் 130

★ நாவிற்கு ருசியும்
★ உடலுக்கு உறுதியும்
அளிப்பது
மொணரு அன் ரோஸ்
பப்படங்கள்
மயில், ரோஸ் மூவர்ண அடையாளங்களைக் கவனித்து வாங்குக.
கண்டிப்பகுதி விநியோகஸ்தர்கள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெனியா.

# கல்முனை எம்பி விடுதலை

## சமஷ்டிக் கட்சியிலிருந்து விலகிவிட்டார்

### திரு. ஸி. அஹமது கூறும் காரணம்

கொழும்பு, வெள்ளி

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த கல்முனை எம். பி. திரு. ஸி. அஹமது இன்று விடுதலை செய்யப்பட்டார்.

திரு. அஹமது தமிழரசுக் கட்சியிலிருந்து ராஜினுமாச் செய்துவிட்டார். தமது ராஜினுமாவை தெரிவிக்கும் கடிதத்தை அவர் சமஷ்டிக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு அனுப்பியிருக்கிருர்.

கட்சியிலிருந்து ராஜினுமாச் செய்யும் இக்கடிதத்தின் நகலை கல்முனை எம். பி., பாதுகாப்பு வெளிநாட்டு மந்திரிக்கும் அனுப்பிவைத்தார்.

"தமிழ் மக்களின் பிரச்சினைக்கும், அவர்களின் முன்னேற்றத்திற்கும் சமஷ்டியோ அல்லது சமஷ்டி ராஜ்யமோ சரியான பரிகாரமல்ல" என திரு. அஹமதின் ராஜினுமாக் கடிதம் கூறுகிறது

"தமிழரசுக் கட்சியிலிருந்து கொண்டு எனது தொகுதி மக்களுக்கான கடமையைச்செய்ய முடியாதென உணருகிறேன். பெரும்பாலான எனது தொகுதி மக்களின் கோரிக்கையை முன்னிட்டு நான் ... செய்கிறேன்" என்றும் திரு. ... அனுப்பியுள்ள கடி...

திரு. அஹமது கடை... வைக்கப்பட்ட தமி... களில் ஒருவர். இன்...

---

கல்வி இலாகா உத்தியோகஸ்தர்களை

## 'ஆசிரியர்கள் சந்தேககண்ணுடன் பார்க்கும் முறைமறைந்துவிட்டது'

### அதிபர்கள் சங்கக் கூட்டத்தில் டாக்டர் குருகே பேச்சு

யாழ்ப்பாணம், சனி

"கல்வி இலாகா உத்தியோகத்தர்களை ஆசிரியர்கள் சந்தேகக் கண்ணுடன் நோக்கும் அந்தப் பழைய முறை தற்பொழுது நீங்கிச் சிநேகபான்மையுடன் நடந்துகொள்ளும் வழக்கம் ஏற்பட்டுள்ளது. கல்வித் திட்டம்மாற்றமுற்றுவரும் இந்த இடைக்காலத்தில் ஆசிரியர்களுக்குள் ஏற்பட்டிருந்த வெறுப்பையும் விளக்கவீனத்தையும் என்னுல் முடிந்தவரை அகற்றியுள்ளேன்"

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற அதிபர்கள் சங்கப் பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய கல்வி அமைச்சின் பிரதம உதவிக் காரியதரிசி டாக்டர் ஏ. டபிள்யூ. பி. குருகே கூறினர்.

அவர் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:-

"பாடசாலை அதிபர்கள் அவசர தேவைகளுக்கு உத்தரவின்றிச் செலவு செய்யக் கூடிய ஒழுங்குகளை என்னுல் முடிந்தளவும் பேசி உத்தரவு பெற்றுத் தருகிறேன். பாடசாலைகளுக்கு உரிய பிரச்சினைகளை வெளிப்படையாகவும் நல்லெண்ணத்துடனும் அதிபர்கள் எடுத்துரைத்தது வரவேற்கத்தக்கது. கல்வி அமைச்சர் அவர்களின் கொள்கைப்படி தமது இலாகாவிலுள்ள பிழைகளை வெளிப்படையாகக் கண்டிப்பதை அவர் வரவேற்பார். ஏனெனில் அப்பொழுதுதான் தேசிய அடிப்படையில் கல்விப் போதனை செய்வதற்கு மந்திரியாரும் அவரது உத்தியோகத்தர்களும் பாடசாலை அதிபர்களும் ஒத்துழைத்து அதை நடைமுறைக்குக் கொண்டுவரக்கூடியதாக இருக்கும். அதிபர்கள் எப்பொழுதும் தங்கள் குறைகளை எடுத்துச் சொல்வதை வரவேற்கத்தக்கதாக இருக்கும். அப்படியான குறைகளை நீக்குவதற்கு நானும் சம்பந்தப்பட்ட அமைச்சரும் கல்வி மந்திரி காரியாலய ஏனைய உத்தியோகத்தரும் முயற்சி செய்வோம் என உறுதி கூறுகிறேன்."

திரு. டி. டி. ஜெயரத்தினம் பேசும்போது பள்ளிக்கூட நிதிகளைப்பற்றியும், தளபாடங்கள் பற்றியும், ஏற்பட்டுள்ள நெருக்கடிபற்றியும் அண்மையில் வந்துள்ள சுற்று நிருபங்களின்படி அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவருவதிலுள்ள கஷ்டங்களைச் சுட்டிக்காட்டினர். பள்ளிக்கூடத்துக்குத் தேவையான உபகரணங்கள் கிடைப்பதில் ஏற்படும் தாமதம்பற்றியும் அவர் எடுத்துரைத்தார்.

(5ம் பக்கம் பார்க்க)

---

## திருவிழாவில் இராணுவ வீரர் நடனம்!

உடுப்பிட்டி, வெள்ளி

மாலிசந்தைப் பிள்ளையார் கோவிலில் புதன் இரவு நடந்த திருவிழாவில் சதுர்க் கச்சேரியைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு இராணுவ வீரர் ஆட்டம் சுவைக்கவில்லை என்று கூறி, தன்னை ஆடும்படி அனுமதி வழங்கக் கோரினர். அனுமதி வழங்கப் பட்டதும் மூன்று கீர்த்தனைகளுக்கு அவர் ஆடினர். தான் அணிந்துவந்த இராணுவ உடையுடன், சப்பாத்துக்களைக் கழட்டிவிட்டு சலங்கைகளைக் கட்டி ஆடினர். மக்கள் கரகோஷம் செய்தனர். முடிவில் அவருக்கு மாலை சூட்டப்பட்டது.

---

## இந்த எம். பி. க்கள் கலந்து கொள்ளவில்லை

கொழும்பு, வெள்ளி

நேற்று நடைபெற்ற பார்லிமெண்ட் விழாவில் திருவாளர்கள் பிலிப் குணவர்த்தன, ரெபெட் குணவர்த்தன, லஷ்மன் ராஜபக்ஸா, ஆர். ஜி. சேனநாயக்கா ஆகியோர் கலந்து கொள்ளவில்லை.

தமிழ் எம். பி.க்களில், யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா மட்டுமே விழாவில் கலந்துகொண்டார்.

---

## தி. மு. க. மாநாட்டுக்கு உடுப்பிட்டி எம். பி. வாழ்த்து

உடுப்பிட்டி, வெள்ளி

இம்மாதம் மதுரையில்நடக்கவிருக்கும் தி. மு. க. மாநாட்டுக்கு அழைக்கப்பட்ட உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் தான் அம் மாநாட்டிற்கு வரமுடியாததையிட்டு வருத்தந் தெரிவித்ததுடன் தி. மு. க. தமிழ் பேசும் மக்களுக்கும் தமிழ் மொழிக்கும் ஆற்றியுள்ள பணிகளைப் பாராட்டி வியாழன் பிற்பகல் ஒரு தந்தி அனுப்பியுள்ளார்.

---

## சிம்மாசனப் ... சமசமாஜக் கட்சி ஆதரியாது?

கொழும்பு, வெள்ளி

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைக்கு லங்கா சமசமாஜக்கட்சி ஆதரவளிக்காது என தற்போது அறிகுறிகள் தென்படுகின்றன.

இந்த வாரத்தில் கூடும் கட்சியின் மத்தியகமிட்டி, சிம்மாசனப் பிரசங்கம் பற்றி என்ன செய்வதென விவாதித்து ஒரு முடிவுக்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வார இறுதியில் நடைபெறவிருந்த கட்சியின் வருடாந்த மகாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

---

## இலங்கை வரும் 18வயதான இரு பிரிட்டிஷ் யுவர்கள்

### இங்குள்ள பாடசாலைகளில் ஓராண்டு போதிப்பர்

கொழும்பு, வெள்ளி

இலங்கைப் பாடசாலைகளில் பயிற்சியளிக்கும் பொருட்டு அடுத்த ஆண்டு இரு பிரிட்டிஷ் யுவர்கள் இலங்கை வரவிருக்கிருர்கள். சர்வகலாசாலையில் பிரவேசிக்குமுன், அவர்கள் இலங்கையில் ஓராண்டு ஆசிரியர்களாகக் கடமையாற்றுவார்கள்.

சார்ள்ஸ் ரோஜர்ஸ் நோர்மன், ஜோன் டக்ளஸ் ஸ்பார்க் ஆகிய இவ்விரண்டு யுவர்களுக்கும் 18 வயதுதான் ஆகிறது.

வெளிநாடுகளில் வலிய சேவை செய்யும் ஸ்தாபனத்தின் சார்பாக அவர்கள் இங்கு வருகிருர்கள்.

கண்டி டிரினிட்டி கல்லூரியில் விஞ்ஞானத்தையும், இதர பாடங்களையும் ஒருவர் போதிப்பார். மற்றவர், நாரஙேயில் ஆங்கிலம் போதிப்பார். வயதில் இளைஞர்களாயினும் இருவரும் நன்கு தகுதிபெற்றவர்களாகும்.

30 நாடுகளில் சேவைசெய்ய இவ்விதத் தகுதிபெற்ற இளைஞர்கள் 150 பேர் முன்வந்திருக்கிருர்கள்.

---

## சம்பளக் கமிஷன் சிபார்சு அமுல் நடத்தப்பட்டால்...

### மேலதிகமாக 5 கோடி ரூபாய் செல்வாகும்

கொழும்பு, வெள்ளி

அரசாங்கஊழியர்கள் 55வது வயதில் அவர்களது வேலையினின்றும் ஓய்வுபெற்றுக் கொள்ளவேண்டுமென்ற சம்பளக் கமிஷனின் சிபார்சுகளும், திட்டமும் அமுல் நடத்தப்பட்டால், அதிகமாக இன்னும் ரூ. 5 கோடி செலவழிக்கவேண்டுமென்று அரசாங்கத்திற்கு திறைசேரி தெரிவித்துள்ளது.

சம்பள உயர்வுக்கு ரூ. 3 கோடியும் 55-வது வயதில் ஓய்வு பெறவேண்டும் என்ற சட்டம் கொண்டுவரப்பட்டால் அவர்களுக்கு பென்ஷனுகக் கொடுப்பதற்கு ரூ. 2 கோடியும் வேண்டுமென்று தெரிகிறது.

வரவு செலவுத் திட்டம் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படுமுன், அடுத்த 15 தினங்களுக்குள் இது சம்பந்தமாக அரசாங்கம் ஒரு முடிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

---

## மகாராணியுடன் ககாரின் விருந்துண்டார்

லண்டன், ஜூலை 14

சோவியத் வானவெளிவீரர் யூரி ககாரினுக்கு இன்று மகாராணி எலிஸபெத்தும், எடின்பரோ கோமகனும் மதிய போஜன விருந்தளித்துக் கௌரவித்தனர். இவ்விருந்து பக்கிங்ஹாம் அரண்மனையில் நடைபெற்றது.

---

## "கற்பூரம் இலகுவாக கிடைக்க வழிசெய்க" மாநகரசபை பிரேரணை

யாழ்ப்பாணம், வெள்ளி

இந்துக்களுக்கும் பொதுமக்களுக்கும் தேவையான கற்பூரம், சர்க்கரை ஆகியன இலகுவாகக் கிடைக்கவழி செய்யுமாறு வர்த்தக அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் திரு. எஸ். இராசரத்தினத்தின் பிரேரணை ஒன்றை யாழ்ப்பாணம் மாநகரசபை ஏற்றுக்கொண்டது.

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணாநந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி:
யாழ்ப்பாணம்.

## தேவை

சேலம் சைஸ் ஊர் பீடிகள் தொகையாகத் தரக் கூடியவர் வேண்டும். திருக்கோணமலை, மட்டக்களப்பு பகுதிக்கு இரு பிரதிநிதிகளும், காரியாலய கடமைகளுக்கு ஒருவரும் தேவை. பிரதிநிதிகள் தெரிவு செய்ய 17ம் திகதி திருக்கோணமலை கிங்ஸ் ஹோட்டலில் எங்கள் பிரதிநிதி தங்கியிருப்பார். விபரங்களுக்கு 16-ம் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும்.

SARA AGENCY,
193, Hospital Road,
Jaffna.


## சம்ஸ்கிருதப் பரீட்சை

பம்பாய் பாரதீய வித்யா பவனத்தின் சம்ஸ்கிருதப் பரீட்சைகள் அக்டோபர் 8-ந்திகதி யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும். விண்ணப்பப் பிரதிகளுக்கும் வேறு விபரங்களுக்கும் பின்வரும் விலாசத்துக்கு எழுதுக:

கேந்திர வியவஸ்தாபகர்,
ச. வி. பரிஷத்,
சோமாஸ்கந்தக் கல்லூரி,
புத்தூர்.


## தேவை

பெனியன் கட்டிங், ஸ்டிச்சிங் வேலைகளில் நல்ல தேர்ச்சியுள்ள பெண் பிள்ளைகள் உடனே தேவை. கீழ்கண்ட விலாசத்திற்கு நேரில் விண்ணப்பிக்கவும். Mrs. M.T.C. நம். 46, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.


## மார்க்கெட் விலை வாசிகள்

### தங்கம், வெள்ளி

யாழ்ப்பாணம், வெள்ளி

| | ரூ. ச. |
|---|---|
| புடத்தங்கம் | 106 - 50 |
| நகைப்பவுன் புதிது | 98 - 00 |
| " பழையது | 96 - 00 |
| தங்கப்பவுன் | 101 - 00 |
| அரைத்தங்கப்பவுன் | 55 - 00 |
| மூஸ்வெள்ளி தோலா | 2 - 25 |


## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# தெல்லிப்பளையில் டாக்டர் குருகே

குரும்பசிட்டி, வெள்ளி

கல்வி நிர்வாகம் சம்பந்தமாக வடமாகாண கல்லூரி அதிபர்களின் மகாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த கல்வி அமைச்சின் காரியதரிசி டாக்டர் ஏ. டபிள்யூ. பி. ஆனந்த குருகே வியாழக்கிழமை காலை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கு விஜயம் செய்தார். வட மாகாண கல்வி அதிகாரி திரு. எஸ். யூ. சோமசேகரத்துடன் மகாஜனக் கல்லூரிக்கு விஜயம் செய்த டாக்டர் குருகேயை கல்லூரி அதிபர் திரு. தெ. து. ஜயரத்தினம் வரவேற்றார். கல்லூரியிலுள்ள நடராஜா மூர்த்திக்கு நடைபெற்ற விசேஷ ஆராதனையில் கலந்து கொண்டபின் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்ட கூட்டத்தில் டாக்டர் குருகே சொற்பொழிவாற்றினர்.

இதன் பின் திரு. வி. பொன்னம்பலத்தின் வேண்டுகோளின் பேரில் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் டாக்டர் குருகே விஜயம் செய்தார்.

# ரூபாய் மூன்றரை லட்சம் பெறுமதியான தங்கக் கட்டிகள்

## புறக்கோட்டையில் பிடிபட்டது

கொழும்பு, வெள்ளி

மூன்று லட்சத்து ஐம்பதினயிரம் ரூபாய் பெறுமதியான தங்கக்கட்டிகளை புறக்கோட்டைப்பொலிஸார்நேற்றுக்காலை கைப்பற்றினர்.

யாழ்ப்பாணத்துக்கு டிக்கட் எடுத்துக்கொண்டு 'யாழ் தேவி' யில் புறப்படுவதற்காக கோட்டை ரயில்நிலையத்தினுள் நுழைந்த மூன்று பேர்களிடமிருந்து இத்தங்கக்கட்டிகளைப் பொலிசார் கைப்பற்றினர்.

யாழ்ப்பாணம் பழைய வீதியைச் சேர்ந்த இருவரும் புறக்கோட்டை இரண்டாம் குறுக்குத் தெருவைச்சேர்ந்த ஒருவரும் தான் இத்தங்கக்கட்டிகள் வைத்திருந்தனர். அவர்களுடைய சூட்கேஸ்களிலும் அவர்களிடமும் 1,320 தோலா எடையுள்ள 132 தங்கக்கட்டிகளும் 50 தங்கச் சவரன்களும் இருக்கக் காணப்பட்டன.

சுங்கத் தடுப்பு அதிகாரிகள் அழைக்கப்பட்டனர். இம் மூவரையும் விசாரணை செய்வதற்காக அதிகாரிகள் அழைத்துச் சென்றனர். நேற்றுமுழுநாளும் விசாரணை செய்யப்பட்டபின் இன்று மீண்டும் தொடர்ந்து விசாரணை நடைபெற்றது. தங்கக் கட்டிகள் அடையாளம் தெரியாதவாறு அடிக்கப்பட்டிருந்தன.

## மாஜி கிராமச் சங்க தலைவர் மறைவு

உடுப்பிட்டி, வெள்ளி

முன்னைநாள் கட்டைவேலிக் கிராமச் சங்கத் தலைவர் திரு. எஸ். கந்தவனம் நேற்று முன்தினம் கரவெட்டியிலுள்ள தமது வீட்டில் மார்படைப்புக் காரணமாக இறந்தார். இவரது பிரிவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக கட்டைவேலிக் கிராமச்சங்கக் கந்தோரில் கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டது.

## வழக்குகளை சிங்களத்தில் நடத்தவும்

### முன்னாள் நீதிபதி பேச்சு

கொலன்னாவை, வெள்ளி

'மாஜிஸ்ரேட் கோர்ட்டுகளிலும் சுப்றீம் கோர்ட்டுகளிலும் அப்பீல் கோர்ட்டுகளிலும் வழக்குகளைச் சிங்களத்தில் நடத்தவும் கோர்ட் தஸ்தாவேஜுகளை சிங்கள மொழியில் வைத்திருக்கவும் உடன் கட்டளை பிறப்பிக்கப்படவேண்டும்' என முன்னைநாள் சுப்றீம் கோர்ட் நீதிபதி திரு. கே. டி. டி' சில்வா சட்டக் கல்லூரியில் நடைபெற்ற சிங்கள பேச்சுப் போட்டியின் முடிவில் கூறினர்.

சிங்களமொழி அரசகருமமொழியாகிய பின்னர் கோர்டுகளில் சிங்களத்திலேயே அலுவல்கள் நடாத்தப்பட வேண்டுமென்று சட்டமிருந்தும் தற்பொழுது கிராமக் கோர்டுகளில் தான் இது அனுஷ்டிக்கப்படுகிறதுஎன அவர் மேலும் தெரிவித்தார்.

# கல்லால் அடித்தவருக்கு 6 மாதக் கடுங்காவல்

யாழ்ப்பாணம், சனி

கல்லால் அடித்துக் காயப்படுத்தியதாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொள்ளவே எதிரிக்கு ஆறுவாரக் கடுங்காவல் சிறையும் 75 ரூபாய் அபராதமும் விதித்து யாழ்ப்பாணம் நீதவான் தீர்ப்பளித்தார்.

ஆவரங்காலைச் சேர்ந்த காசியர் மாணிக்கம் என்பவரைக் கல்லால் அடித்துக் காயப்படுத்தியதாக புத்தூர் மேற்கைச் சேர்ந்த சின்னையா இரத்தினம் என்பவர் மீது குற்றம் சாட்டி கோப்பாய்பொலிஸைச் சேர்ந்த உதவி இன்ஸ்பெக்டர் ஆர். தேவராஜன் இவ்வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ். வேலும்மயிலும் சாட்சியமளிக்கையில் மாணிக்கத்தின் காயங்களை விவரித்து விட்டு கண்ணடியில் பட்ட காயம்கண்பார்வைக்கே இடையூறு செய்யக்கூடியதென்றூர்.

27 வயது விவசாயியான காசியர் மாணிக்கம் சாட்சியமளிக்கையில் பின்வருமாறு கூறினர்:

என். சுப்பிரமணியமும் ஏ. கந்தசாமியும் என்னிடம் வந்து இரத்தினம் என்பவரின் வீட்டைக் காட்டுமாறு கேட்டனர். நான் அவர்களைக் கூட்டிக் கொண்டுபோய் அவரது வீட்டைக் காட்டினேன். அந்த நேரம் அவர் வீட்டில் இல்லை. நாங்கள் எல்லோரும் வெளியில் வந்து காத்துநின்றோம். சுமார் 6 மணியளவில் இரத்தினம் வந்தார். பணம் கொடுக்கும்படி இரத்தினத்திடம் கந்தசாமி கேட்டார். விஷயத்தை முடித்துவிடு என்று இரத்தினத்திடம் நான் சொன்னேன். இந்த விஷயத்தில் தலையிட வேண்டாமென்று இரத்தினம் என்னிடம் சொன்னர். நான் அங்கிருந்து புறப்பட்டு திருமதி கிருஷ்ணபிள்ளையின் வீட்டுக்குச் சமீபத்தில் சென்றபோது இரத்தினம் ஓடிவந்து தன்னுடைய விஷயத்தில் தலையிட்டது ஏன்? என்று கேட்டு ஒரு கல்லை ஓங்கினர். அது எனது கண்ணில் பட்டது.

வழக்கு விசாரணையின் போது எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

எதிரிக்கு ஆறுவார கடுங்காவல் சிறைத்தண்டனையும் 75 ரூபாய் அபராதமும் அபராதம் கட்டத் தவறினல் மேலும் ஆறுவாரக் கடுங்காவல் சிறைத்தண்டனையும் என்று நீதவான் அரசுவால்டன் தீர்ப்பளித்தார்.

# தொழிலாளருக்கு இலவச சட்ட உதவி

## தொழில் இலாகா பரிசீலனை

கொழும்பு, வெள்ளி

தொழிலாளர் நஷ்டஈடு கமிஷனர் இலாகா, வேலை செய்யும் நேரத்தில் விபத்துக்குள்ளாகும் தொழிலாளருக்கு நஷ்டஈடும், இலவச சட்ட ஆலோசனையும் வழங்க வேண்டும் என்று சிபார்சு செய்த திட்டத்தை தொழில் அமைச்சு பரிசீலனை செய்துவருகிறது.

தற்பொழுது விபத்துக்குள்ளாகும் தொழிலாளர்கள் தங்கள் சொந்தப் பணத்தில் வழக்கறிஞர்களை அமர்த்த வேண்டும். அல்லது கமிஷனர் முன்னால் விசாரணைக்கு அவர்களே நேரில் போக வேண்டும். இப்போது வழக்கத்தில் இருந்து வரும் இலவச சட்ட உதவி மாதம் 150 ரூபாய்க்கு குறைவாக வருமானம் கிடைப்பவர்களுக்குத்தான் உதவியாக அமைந்திருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் மற்றவர்களுக்கும் சட்ட உதவி வழங்கப்படுகிறது.

அநேக தொழிலாளர் அறியாமையாலும், சட்ட நிபுணர்களை அமர்த்தப் போதிய பணவசதி இல்லாத காரணத்தாலும் முதலாளியிடம் மிகக் குறைந்த தொகையை நஷ்டஈடாகப் பெறுகிறார்கள். இவ்விதம் அவர்கள் சிறு தொகையாவது நஷ்டஈடாகப் பெற்றுவிட்டால் சட்டப்படி நஷ்டஈடு கோர முடியாது போய்விடுமென மேற்படி இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தத் திட்டம் நடைமுறைக்கு வந்தால், நிரந்தரமாகச் சட்ட நிபுணர்களை வேலைக்கு அமர்த்துவதா? அல்லது சில சட்ட நிபுணர்களின் பெயர்ப் பட்டியலை வைத்துக் கொண்டு, சேவை தேவைப்படும்போது அவர்களை அழைப்பதா என்று தொழில் இலாகா ஆலோசனை செய்து வருகிறது.

# மூதூர் எம். பி. யிடம் குடியேற்றவாசிகள் முறையீடு

திருக்கோணமலை, வெள்ளி

முறையான நீர்ப்பாசன வசதிகள் அளிக்கப்படாததால் தமக்குக் கொடுக்கப்பட்ட நிலத்தை சீர்செய்ய முடியாதிருப்பதாக மொல்லிப்பொத்தான குடியேற்ற வாசிகள் இங்கு விஜயம் செய்திருந்த மூதூர் எம். பி. ஜனுப் ஏ. எல். ஏ. மஜீத்திடம் முறையிட்டார்கள்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

'இங்கு குடிதண்ணீர் கிடைப்பதில்லை. லொறிகளில் பொருத்தப்பட்ட தண்ணீர் தாங்கிகள் மூலம் குடியேற்றவாசிகளுக்கு குடிதண்ணீர் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனல் இந்தக் குடிதண்ணீர் குடியேற்றத்திட்ட அதிகாரிகளுக்கும் லொறிச் சாரதிகளின் நண்பர்களுக்குமே விநியோகிக்கப்படுகின்றது. மற்றவர்கள் மைல் கணக்காக நடந்தே குடிதண்ணீர் பெற வேண்டியுள்ளது.

சுகாதார வசதியோ தபால் வசதியோ இங்கில்லை. சிலவீடுகள் முறையாகக் கட்டப்படாததால் அவை சேதமடைந்துள்ளன'

ஜனுப் மஜீத், அவர்களிடம் பேசுகையில், அரசாங்கம் அவர்களுக்கு கிணறுகள் கட்டிக் கொடுத்து உதவத் திட்டமிட்டிருப்பதாகவும், இத் திட்டங்களை முதலில் வகுத்தவர்கள் சரியான முறையில் திட்டமிடாததால் நாட்டின் பல பகுதிகளிலும் இக் கஷ்டம் ஏற்பட்டுள்ளதென்றும் தெரிவித்தார்.

## என்ஜின் மோதி ஸ்டேஷன் மாஸ்டர் மரணம்

பெந்தோட்டை, வெள்ளி

அலுத்கம ஸ்டேஷன் மாஸ்டர் திரு. பி. எம். பெர்னண்டோவின் மீது புகையிரத என்ஜின் ஒன்று மோதியதால் அவர் ஸ்தலத்திலேயே மாண்டார். ஸ்டேஷனுக்கு அண்மையிலுள்ள புகையிரத வீதியில் இவ் விபத்து நடந்தது.

## வேலை இழக்கும் ஏயர் சிலோன் சிப்பந்திகள்

### இ. போ. சபை கைகொடுக்கும்?

கொழும்பு, வெள்ளி

இம் மாத இறுதியிலிருந்து வேலைநீக்கம் செய்யப்படவிருக்கும் பதினைந்து ஏயர்சிலோன் சிப்பந்திகளுக்கு, இ. போ. சபையில் ஏதாவது வேலை வழங்குமாறு மராமத்து இலாகா கேட்டுள்ளது. இம் மாதம் முடிவடையுமுன் இவர்களுக்கு வேலை தேடிக் கொடுப்பதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றதென ஒரு அதிகாரி தெரிவித்துள்ளார்.

# காஷ்மீர் பிரச்சினை - விரைவில் சுமுகமான தீர்வு அவசியம்

## கென்னடி - அயூப் கூட்டறிக்கை

வாஷிங்டன், ஜூலை 14
சர்வதேச பொதுவுடமையினால் தெற்காசியாவுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை முன்னிட்டு இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலுள்ள காஷ்மீர் பிரச்சினைக்கு சமாதானமான முறையில் தீர்வு காண வேண்டியது அவசியம் என்பதை பாகிஸ்தானும் அமெரிக்காவும் ஒப்புக் கொண்டுள்ளன.

அமெரிக்க ஜனாதிபதி ஜோன் திரு. எப். கென்னடியுடன் பாகிஸ்தான் ஜனாதிபதி பீல்ட் மார்ஷல் அயூப்கான் பேச்சுவார்த்தை நடத்தியபின் இரு தலைவர்களும் விடுத்த கூட்டறிக்கையில் காஷ்மீர் பிரச்சினை சமாதானமான முறையில் தீர்க்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர்.

காஷ்மீர் பிரச்சினையில் இந்தியாவையோ, பாகிஸ்தானையோ அமெரிக்க ஜனாதிபதி கென்னடி சார்ந்தவரல்ல என்று அந்தக் கூட்டறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சர்வதேசக் கம்யூனிஸத்திலிருந்து தெற்கு ஆசியாவைப் பாதுகாப்பதற்குக் காஷ்மீர் பிரச்சினைக்கு திருப்திகரமான தீர்வு ஏற்பட வேண்டுமென்பதும் காஷ்மீர் பிரச்சினையைச் சுமுகமான முறையில் தீர்த்து வைப்பதுதான் அமெரிக்காவின் விருப்பமென்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் தரிசு நிலங்களாகக் கிடக்கும் பெருந்தொகையான ஏக்கர் நிலங்களை விவசாயத்துக்குப் பயன்படுத்த தொழில்நுட்ப நிபுணர்களையும் விவசாயக் கருவிகளையும் கொடுத்துதவ அமெரிக்கா சம்மதம் அளித்திருப்பதாக அந்தக் கூட்டறிக்கை தெரிவித்துள்ளது.

# “துருப்புகளை வாபஸ்பெறுக!”

## பிரிட்டனுக்கு ஈராக் வேண்டுகோள்

லண்டன், ஜூலை 14
குவாய்த்திலிருந்து பிரிட்டன் தனது படைகளை வெளியேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் ஒரு அறிக்கையை லண்டனிலுள்ள ஈராக் ஸ்தானிகர் நேற்று பத்திரிகைகளுக்கு விடுத்தார்.

ஈராக்கின் பஸ்ராமாகாணத்தின் ஒரு பகுதியாகவே குவாய்த்தை ஈராக் கருதி வருவதாகவும் குவாய்த் தான் ஈராக்கின் துறைமுகமாக இருந்து வந்ததென்றும் இப்பொழுது ஈராக்கிற்கு துறைமுகம் இல்லாதிருக்கிறதென்றும் அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

—

## ரூ. 500 அபராதம்

பருத்தித்துறை, வியாழன்
நல்லதம்பி சோமசுந்தரம் என்பவரை 31-12-60 அன்று கோடரியால் வெட்டி பலத்த காயம் ஏற்படுத்தியதாக த. வேலுப்பிள்ளை, த. சின்னத்துரை, த. பரஞ்சோதி ஆகியோர் மீது பருத்தித்துறை பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் பருத்தித்துறை நீதவான் திரு. கே. லத்துவஹெட்டி 1ம், 2ம் எதிரிகட்கு தனித்தனியே ரூபாய் 500 அபராதம் விதித்தார்.

3ம் எதிரியை ரூபாய் 250க்கு ஒரு வருட நன்னடத்தைப் பிணையில் விடுதலை செய்தார்.

—

## சென்னையில் டாக்டர் ஒக்பாரா

சென்னை, ஜூலை 14
கிழக்கு நைஜீரியப் பிரதம மந்திரி டாக்டர் ஒக்பாரா நேற்று சென்னை வந்து சேர்ந்தார். அவர் சென்னையிலும் சுற்றுப்புறங்களிலுமுள்ள கைத்தொழில் நிலையங்களைப் பார்வையிடுவார். பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலையை டாக்டர் ஒக்பாரா நேற்றுப் பார்வையிட்டார்.

# காங்கோ பார்லிமெண்ட் நாளை கூடுகிறது

## கடாங்கா பகிஷ்கரிக்கும்?

லியப்போல்ட்வில்லி, ஜூலை 14
காங்கோ பார்லிமெண்ட் மீண்டும் நாளை லியப்போல்ட்வில்லிக்கருகில் கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பார்லிமெண்ட் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக தென் காசாய் மாகாணத்தின் மன்னராக முடி சூட்டிக் கொண்ட கலோஞ்சி லியப்போல்ட்வில்லி வந்து சேர்ந்துள்ளார்.

லுமும்பாவின் ஆதரவாளரான ஸ்டான்லிவில்லி அரசாங்கத்தின் பிரதமர் திரு. கிஸங்கா இன்று லியப்போல்ட்வில்லி வந்து சேர்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

பார்லிமெண்ட் கூடும் இடத்தில் கலகம் நேராமலும் ஆக்கிரமிப்பு எதுவும் ஏற்படாமலும் பாதுகாப்பதற்காக ஐ. நா. துருப்புக்கள் ஆயுதந் தாங்கிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

பார்லிமெண்ட் கூட்டத்தில் கடாங்கா மாகாண எம். பி.க்கள் யாரும் கலந்து கொள்ள மாட்டார்களென்று கருதப்படுகிறது. பார்லிமெண்ட் மீண்டும் கூடுவதற்கு முன்னர் காங்கோலிய தலைவர்களின் உச்சி மகாநாடு ஒன்று நடைபெற வேண்டுமென்று கடாங்கா அதிபர் ஷோம்பே அறிவித்திருந்தார்.

# குவாதமாலாவில் ஒரு மாத ராணுவச்சட்டம்

## சதித்திட்டம் முளையிலே கிள்ளி எறியப்பட்டது

லண்டன், ஜூலை 14
குவாதமாலா அரசாங்கத்தைக் கவிழ்க்க நடந்த சதி முளையிலேயே கிள்ளி எறியப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது. இச்சதி நடவடிக்கை கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து புதன்கிழமை இரவு முதல் 30 நாட்களுக்கு அங்கு இராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கலகக்காரர்களுக்கு விநியோகிக்கப்படவிருந்ததாகக் கருதப்படும் பெருந் தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டனவாம்.

குவாதமாலாவின் விமானப் படைத் தளத்தின்மீது நேற்றுக் காலை தாக்குதல் நடத்துவதற்கும் பெருமளவில் நாச வேலைகளைச் செய்வதற்டிம் சதிகாரர்கள் திட்டமிட்டிருந்ததாகவும் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுவிட்டதாகவும் குவாதமரலா அரசாங்சம் அறிவித்துள்ளது.

—

## கடைகளில் கல்லோயா சீனி

கல்லோயா, வெள்ளி
கல்லோயாச் சீனித் தொழிற்சாலையில் முதன் முதலாகத் தயாரிக்கப்பட்ட வெள்ளைச் சீனியில் 500 தொன் சீனி பொதுச் சந்தையில் விற்பனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தினமும் 50 தொன் சீனி இத் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு தொன் சீனி உற்பத்திக்கு சுமார் 600 ரூபா செலவாகிறது. இறக்குமதி செய்யும் சீனி ஒரு தொன்னுக்கும் இதே தொகை செலவாகிறது. கரும்பு பயிரிடப்படும் 10,000 ஏக்கர்களில் அரைவாசிக்கு மேற்பட்ட நிலப் பகுதியிலிருந்து கரும்பு அறுவடை செய்யப்பட்டு விட்டது.

கரும்புத் தொழிற்சாலை சரிவர இயங்கத் தொடங்கினால் சீனி உற்பத்தி அதிகரித்து சீனி விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

—

## ‘வான்’கள் குறைவு

காரைதீவு, வியாழன்
கல்முனை-மட்டக்களப்பு வீதியில் கல்முனை - மட்டக்களப்பு தனிப்பட்ட வான் சேவை கடந்த மாதங்களிலெல்லாம் போட்டா போட்டியாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆனால் தற்பொழுது இப்போட்டியே மறைந்து விட்டது வான்களும் குறைந்து விட்டன.

# டாக்டர் மலலசேகரா

## பிரதமரிடம் விளக்கம் கூறுவார்

கொழும்பு, வெள்ளி
ஐ.நா.வில் இலங்கையின் நிரந்தரத்தூதராகக் நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர் ஜி.பி.மலலசேகரா பேராதனைப் பல்கலைக்கழக பௌத்த சகோதரத்துவ சங்கத்தின் கூட்டமொன்றில் பௌத்த சங்கம் பற்றித் தெரிவித்த கருத்துக்கு விளக்கம் தரும்படி கேட்கப்படுள்ளார். இதுபற்றிப் பிரதம மந்திரியை நேரில் சந்தித்து விளக்கம் தெரிவிக்கப் போவதாக டாக்டர் மலலசேகரா தெரிவித்துள்ளார்.

ஐ, நா வில் இலங்கையின் நிரந்தரப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள டாக்டர் மலலசேகரா நாளை சனிக்கிழமை நியுயோர்க்கிற்குப் புறப்படுவதாக இருந்தார். தமது பேச்சு சம்பந்தமாக விளக்கம் கொடுக்க வேண்டிய காரணத்தால் இவரது பயணம் தற்காலிகத் தடைப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக் கழக பௌத்த சங்கக் கூட்டத்தில் பௌத்த சங்கங்களின் திருத்தம் பற்றிப் பேசுகையில், சங்கங்களைத் திருத்த முன்வருவோர் முதலில் தம்மைத்தாமே திருத்திக் கொள்ள வேண்டும் என்றும், சங்கத்தைத் திருத்துவதற்குத் தற்போதுள்ள முயற்சிகளின் அடிப்படை நோக்கங்களை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்றும் கூறியதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்தது. அரசாங்கத்தைக் குறித்தே டாக்டர் மலலசேகரா இவ்வார்த்தைகளைக் கூறினார் என அரசாங்க வட்டாரங்கள் அபிப்பிராயம் தெரிவித்தன.

—

## ஈராக் மாஜி பிரதமர்கள் விடுதலை

பாக்தாத், ஜூலை 14
ஈராக்கின் தேசிய தினக் கொண்டாட்டங்களை முன்னிட்டு ஈராக்கின் முன்னாள் பிரதமர்களான அலி, ஜமாலி ஆகிய இருவருட்பட அரசியல் கைதிகள் பலரைப் பிரதமர் காசிம் விடுதலை செய்துள்ளார்.

# மலாயாவிலும் குமாஸ்தா வேலையில்தான் மோகம்

கோலாலம்பூர், ஜூலை 13
கூட்டரசு வேலைப் பதிவு நிலையங்களின் வாயிலாக ஆயிரக் கணக்கான இளைஞர்கள் குமாஸ்தா உத்தியோகத்தைப் பெரிதும் நாடுகின்றனர் என்று தொழிலாளர் துணை மந்திரி திரு. வெ. மாணிக்கவாசகம் நிருபர்கள் மகாநாட்டில் கூறினார்.

மேமாதம் மட்டும் 1226 இளைஞர்கள் குமாஸ்தா வேலைக்காகப் பதிந்திருக்கின்றனர் என்று அவர் கூறினார்.

மேலும் 623 யுவதிகளும் குமாஸ்தா வேலைக்குப் பதிந்திருப்பதுடன் வயதானவர்கள் 1355 பேரும் அதே வேலைக்குப் பதிந்து கொண்டிருக்கின்றனர் என்று அவர் சுட்டிக் காட்டினார்.

வேலைப்பதிவு நிலையங்களில் பதிந்து கொண்டிருக்கும் 30,000 க்கும் மேற்பட்டவர்களில் மிகச் சிலரே பால் வெட்டும் வேலை கோரிப் பதிந்து கொண்டிருக்கின்றனர்.

திரு. மாணிக்கவாசகம் நிருபர்கள் மகாநாட்டில் மேலும் தெரிவித்ததாவது:-

“சிறந்த பால்வெட்டுத் தொழிலாளர்களுக்கு இன்னும் கிராக்கியிருந்து வருகிறது. பெங்தோங்கிற்கு அருகிலுள்ள இரண்டு தோட்டங்களில் 50 பால்வெட்டுத் தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். குளுவாங்கிலுள்ள சில தோட்டங்களிலும் 80 பால்வெட்டுத் தொழிலாளர்கள், புல்வெட்டுத் தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். அங்குள்ள வேலைப் பதிவுநிலையத்தால் இந்த வேலைகளுக்கு ஆள் தேடித்தர இயலவில்லை.

—

## பிரான்ஸ், ஈராக் தேசிய தினம்

புதுடில்லி, ஜூலை 14
பிரான்ஸின் தேசிய தினத்தை யொட்டி பிரஞ்சு ஜனாதிபதி டி' காலுக்கு பாரத ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திரப் பிரசாத் இன்று வாழ்த்துச் செய்தி யொன்றை அனுப்பினார். பிரெஞ்சுப் பிரதமர் திரு. டெப்ரேக்கு பிரதமர் நேரு வாழ்த்துச் செய்தி அனுப்பினார். ஈராக்கின் தேசிய தினத்தை யொட்டி ஈராக் பிரதமருக்கும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பப்பட்டன.

## நெசவுப் பயிற்சி கூடத்தில் துணிகள் விற்பனை

மண்டூர், வெள்ளி
மண்டூர் கோட்டை முனை நெசவுப் பயிற்சிக் கூடத்தில் பயிற்சி பெற்றுவரும் பெண்மணிகளின் கைத்திறனால் ஆக்கப்பட்ட பலதரப்பட்ட துவாய்கள், லேஞ்சிகள், தலையணை உறைகள், டீப்போய்ச் சேலைகள் விற்பனையாக்கப்பட்டு வருகின்றன. பெண்மணிகளின் முயற்சிக்கு உறுதுணை புரியும் வகையில் கிராமத்து மக்கள் துணிகளை விலைக்கு வாங்கிச் செல்கிறார்கள்.

# கோலாலம்பூரில் திருக்குறள் விழா

## சுத்தானந்த பாரதி செல்கிறார்

கோலாலம்பூர்
கோலாலம்பூர் குறள் இயக்கத்தின் சார்பில் திருக்குறள் விழா இம்மாதம் 23-ந் திகதி தவத்திரு கவியோகி சுத்தானந்த பாரதியார் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

கூட்டத்தில் ‘குறள் ஓர் உலகப் பொது நூல்’ ‘குறள் இன்பம்’ ‘குறளும் அரசியலும்’ ‘பெண்களும் வள்ளுவரும்’ என்ற தலைப்புகளில் அவர் சொற்பொழிவு நிகழ்த்துவார். சொற்பொழிவு இறுதியில் இசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

விழாவினையொட்டி குறள் மனனப் போட்டி ஒன்றை நடத்த விழாக் குழுவினர் முடிவு செய்துள்ளனர். இப்போட்டியில் இருபது வயதுக்குட்பட்ட ஆண், பெண் அனைவரும் கலந்து கொள்ளலாம்.

விதிகள் 1 கடவுள்வாழ்த்து அன்புடைமை, ஈகை, ஆள்வினையுடைமை, நட்பு எனும் அதிகாரங்களிலிருந்து குறிப்பிடப்படும் குறளைப் பிழை இன்றி ஒப்புவித்தல் வேண்டும். பொருள் கேட்கப்படமாட்டாது. 2 போட்டியில் கலந்து கொள்பவர்கட்கு முறையே மூன்று பரிசுகள் உண்டு.

—

## தேசிய நலனே பிரதானம்

கோலாலம்பூர்,
சகல துறைகளிலும் தேசிய நலனுக்கே முக்கியத்துவம் கொடுக்குமாறு கூட்டரசு தொழில் நுட்ப சிப்பந்திகளுக்கு உதவித் தொழிலாளர் மந்திரி திரு. வி. மாணிக்கவாசகம் அறைகூவல் விடுத்துள்ளார்.

மலாயாவின் அபிவிருத்திக்குத் தொழில் நுட்ப சிப்பந்திகளின் பணிபிரதான இடத்தை வகிக்கிறது என்று கூறிய அமைச்சர் இந்நாட்டின் பிரதான சேவை தடைப்படாதிருக்கவும், திறமையாகச் செயல்படவும் தேசிய நலனுக்கே முக்கியத்துவம் தருமாறு வேட்டுக் கொண்டார்.

### மணிவாக்கு

அன்பே கடவுள். அன்பிலே தோய்ந்தவன் கடவுளிலேதோய்ந்தவன்; கடவுள் அவனிடத்தில் உறைகிருர்.

—பைபிள்.


ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஆனி மீ 31 உ (15-7-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## அரசியல் சீர்திருத்தம்

இலங்கை அரசியல் அமைப்பில் சீர்திருத்தம் செய்ய ஒரு தனிச்சபையை மீண்டும் நியமிக்கப்போவதாக கவர்னர் ஜெனரல் தமது சிம்மாசனப் பிரசங்கத்தில் அறிவித்தார்.

இப்போதுள்ள சோல்பரி அரசியல் திட்டம் அமுலுக்கு வந்து சுமார் 14 ஆண்டுகளாகின்றன. இதில் பலபல குறைகளுள்ளதை அனுபவத்தில் கண்டு, அவற்றைத் திருத்தவும் இலங்கையைக் குடியரசாக்கவும் அரசியல் சீர்திருத்தக் கமிட்டி ஏற்கெனவே சென்ற பார்லிமெண்டால் நியமிக்கப்பட்டது. ஆனல் துரதிருஷ்டவசமாக பல காரணங்களால் அது முற்றுப்பெறவில்லை. மீண்டும் விரிவான அடிப்படையில் அக்கமிட்டி நியமிக்கப்பட்டு, இலங்கைக்கு நல்லதோர் அரசியல் திட்டத்தை வகுக்கவேண்டியது வரவேற்கத்தக்க அவசரவேலையாகும்.

அவ்வித அரசியல் கமிட்டியின் வேலை தாமதமாகக்கூடுமென்றும், அதற்கிடையே, பார்லிமெண்ட் விரும்பினல், இப்போதுள்ள அரசியல் திட்டத்திலேயே சொற்ப மாறுதல்கள் செய்து, இலங்கையை குடியரசாக்க அரசாங்கம் முற்படுமென்றும் அறிவிக்கப்பட்டது. குடியரசு அமைப்பு எவ்வளவு அவசரமோ அவ்வளவு அவசரம் மற்ற ஆசியல் சீர்திருத்தங்களுமாகும். இன்று இலங்கையில் அரசியல் சங்கடங்கள் ஏற்பட்டுள்ளதற்கு, சோல்பரி அரசியலே பெரிதும் காரணமென்றும் கூறலாம். இந்த அரசியல் அமைப்பு தக்கபடி திருத்தப்பட்டால் சங்கடங்கள் வெகுவாகத் தீர்ந்து நாடு ஒற்றுமையாக முன்னேறவும் வழி பிறக்கும்.

பார்லிமெண்ட் சபைக்கும், அரசியலமைப்புச்சபைக்கும் ஒரு முக்கிய வேற்றுமையுண்டு. பார்லிமெண்டில் எந்தவிஷயமும் கட்சி முறையிலேயே கவனிக்கப்படுகிறது. எதிராளி நல்லயோசனை கூறினலும் அது சாதாரணமாக எதிர்க்கப்படுகிறது. அரசியல் நிர்ணயசபையிலே பல மெம்பர்களும், கட்சி முறையிலன்றி, நாட்டின் மேலான நன்மையை மனதிலிருத்தி பரஸ்பரம் விட்டுக்கொடுத்து முடிவுகள் செய்யலாம். ஆகவே குடியரசு அமைப்பு உள்ளிட்டு அரசியலில் திருத்த சம்பந்தமான எல்லா விஷயங்களையும் அரசியல் நிர்ணயசபையிடம்விட்டு அச்சபையின் வேலையை வீண்தாமதமின்றி நிறைவேற்றச்செய்வதே உசிதமாகும்.

## உணவு உற்பத்தி

அரிசி, மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, பழவகைகள், காய்கறி முதலிய உணவுப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்யவும், சில இனங்களில் சுயதேவையைப் பூர்த்திசெய்துகொள்ளவும் அரசாங்கம் எல்லா முயற்சிகளும் செய்யுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பல வருடங்களாக இதுபற்றி முயற்சிசெய்வதாகக் கூறப்படினும், நமது உணவுத் தேவையில் பெரும்பகுதிக்கு வெளிநாடுகளையே நாம் எதிர்பார்க்கிறோம். கோடிக்கணக்கான ரூபாய்களை வெளியேற்றுகின்றோம். இலங்கையில் நீர்வளம், நிலவளம், ஆள்பலம் எல்லாம் இருந்தும்கூட, அவற்றை நாம் நல்லபடி பயன்படுத்தாததால் தான், பிறரிடம் கையேந்தி நாம் வாழவேண்டிய நிலைமையில் இருக்கின்றோம். நாட்டிலுள்ள இயற்கை வளங்களையும் ஆள்பலத்தையும் முழுமூச்சாக உணவு உற்பத்தியில் ஈடுபடுத்துவதாயின், இந்த அவலநிலை பெரிதும் மாறும். வேலையில்லாக் கஷ்டங்களும் குறையும்.

இதுபற்றிய பொறுப்பை தலைமை அரசாங்கம், மண்டல ஆட்சிகளுக்குப் பிரித்துக்கொடுத்தால், பலர் இதில் ஈடுபடலாம். அதிக ஊக்கத்துடன் உணவு உற்பத்திவேலை நடைபெற்று மேலான பலன் அளிக்கலாம். உணவு உற்பத்தியே நாட்டின் முதல் பிரச்சினை ஆதலால் அரசாங்கம் புனராலோசனை செய்து பலரது ஒத்துழைப்பும் பூரணமாகக்கிடைக்கக்கூடிய வழிவகைகளைத் துணிச்சலுடன் செய்யவேண்டும்.

# தோட்டத் தொழிலாளிகள் தோட்டம் வாங்கினர்

## மலாயா இந்தியர் காங்கிரஸ் பாட்டாளிகளின் சாதனை

கோலாலம்பூர், ஜூலை 14

**மலாயன் இந்தியர் காங்கிரஸ் நிறுவிய தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கம் முதன் முறையாகக் கிரயம் செய்த 2,915 ஏக்கர்களைக் கொண்ட புக்கிட் சீடிம் எஸ்டேட்டை சமீபத்தில் அதிகாரபூர்வமாக ஒப்புக்கொண்டது.**

சங்கத்தின் சொத்தாக, இந்த எஸ்டேட்டைக் கூட்டரசு பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் புத்ரா ஆகஸ்ட் 24ந் தேதி திறந்துவைப்பார் என்று மராமத்து அமைச்சரும், கூட்டுறவு சங்க ஸ்தாபகருமான டத்தோ வீ. தி. சம்பந்தன் அறிவித்தார்.

'புக்கிட்சீடிம்எஸ்டேட்டை'த் தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கம் ஒப்புக்கொண்டதானது இந்நாட்டுத் தொழிலாளர்களுக்கே பெருமை தரக்கூடியதாகும். ஏனெனில் இது வரை சங்கத்தில் அங்கத்துவம் பெற்றுள்ள சுமார் 14,000 உறுப்பினர்களில் 99 சதவிகிதத்தினர் பாட்டாளிகளே' என்று டத்தோ சம்பந்தன் கூறினர்.

தோட்டத் துண்டாடலால் தொழிலாளர்கள் பாதிப்புறுமல் இருக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் துவக்கப்பட்டதே தேசிய நிலநிதிக் கூட்டுறவுச் சங்கமாகும் என்பதைச் சுட்டிக்காட்டிய அவர், சங்கம் கிரயம் செய்திருக்கும் எஸ்டேட் நிர்வாகத்தில் உடனடியான மாற்றங்கள் ஏதும் இருக்காது என்பதையும் தெளிவுபடுத்தினர்.

புக்கிட்சீடிமில் 400 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். அதன் 60 சதவிகிதப் பகுதியில் ரப்பர் உற்பத்தி அதிகமாய் இருந்து வருகிறது. மாமூல் பிரகாரம் மறுநடவுத் திட்டம் அமுல் செய்யப்பட்டு வருகிறது.

"சென்ற ஆண்டில் மட்டும் 11,50,000 பவுண்டு ரப்பர் அத்தோட்டத்தில் உற்பத்தியாகியிருக்கிறது" என்ருர் அமைச்சர் சம்பந்தன்.

## 5 லாமாக்களுக்கு இலங்கை தேரோ அழைப்பு

கொழும்பு, வெள்ளி

இந்தியாவிலுள்ள திபேத்திய லாமாக்களைப் பார்க்கச் சென்ற எம். விபுலசார தேரோ, அவர்களில் ஐந்து லாமாக்களையும் ஒரு திபேத்தியரையும் இலங்கைக்கு வருமாறு இந்திய அரசாங்கத்தின் மூலமாக அழைப்பு விடுத்துள்ளார்.

பாரதப் பிரதமர் நேரு மூலமாக அவர் அனுப்பியுள்ள அழைப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

'இங்கு வரும் லாமாக்கள் எனது ஸ்தாபனத்தில் சகல வசதிகளுடன் வாழலாம். சிங்களவரது பழக்க வழக்கங்களால் அவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள். தமது விழாக்களை அவர்களது வழக்கத்துக்கேற்ப கொண்டாடலாம்?

இவர்கள் இலங்கை வருவதற்கான பிரயாண வசதிகளை அளிக்குமாறும் தேரோ பிரதமர் நேருவைக் கேட்டுள்ளார்.

## ஆஸ்பத்திரியில் ஒழுங்கீனமாக நடப்பவர்கள்

கொழும்பு, வெள்ளி

வைத்தியசாலைகளிலும் அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும் ஒழுங்கற்ற முறையில் நடப்போருக்கு எதிராகக்கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி வைத்தியஅதிகாரிகள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

வைத்திய அதிகாரி டாக்டர் டபிள்யூ. ஏ. கருணரத்தின விடுத்த சுற்றறிக்கையில் ஒழுங்கற்ற முறைகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

புகை பிடித்தல், வெற்றிலை மெல்லுதல், வேலை நேரங்களிற் குடிபோதையில் இருத்தல் இத்தகைய குற்றங்களைப் புரிவோருக்கெதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று டாக்டர் கருணரத்தின குறிப்பிட்டுள்ளார்.

அதிகாரிகள் கூறும் ஒழுங்கு முறைகளை யாவரும் அனுசரித்து நடக்கவேண்டுமென்றும் அவ்விதம் நடந்துகொள்ள முடியாதிருந்தால் தமக்குப் புகார் செய்யலாமென்றும் அவர் அறிவித்தார்.

இரத்தினக் கம்பளம்

## லண்டன்செய்தி!

பதுமன்

நாய் மனிதனைக் கடித்தால் அது புதினமல்ல. மனிதன் நாயைக் கடித்தால் அதுதான் புதினம் என்று பத்திரிகைத் தொழிலிற் பயிற்சி பெறுபவர்கள் முதலிற் தெரிந்துகொள்ளும் ஒரு பழைய பாடமாகும்.

ஆனல் லண்டனிலிருந்து கிடைத்திருக்கும் செய்தி வேறொரு விதமாக அமைந்திருக்கின்றது. அங்குள்ள ஒரு மிருக டாக்குத்தருடைய கையில் மனிதன் ஒருவன் தனது பற்களைப் பதித்துவிட்டான்! நாய்க் காட்சிக்கு அனுப்புவதற்காக நாய் ஒன்றை மிருகடாக்குத்தர் பரிசோதனை செய்துகொண்டிருக்கும் சமயம் பார்த்து அந்த மனிதன் அவரைக் கடித்து விட்டான். டாக்குத்தர் திரும்பிப் பார்த்தார். நாய் பசுப்போல் சாந்தமாகநின்றுகொண்டிருந்தது.

### ஆட்சேபம்

டாக்குத்தர் தன்னைக்கடித்த ஆசாமியைத் திரும்பிப்பார்த்தார்.

"நீர் எனது நாயைப் பரிசோதனை செய்யும்முறை பெருந்தவறு" என அந்தமனிதன் பாய்ந்து வீழ்ந்தார்.

மறுகணம் நாய்க் காட்சிநடைபெறற இடத்தில் ஒரே பரபரப்பு. மனிதன் ஒருவன் டாக்குத்தரைக் கடித்துவிட்டான் என்ற செய்தி நகரமெங்கும் தீ போற்பரவியது. பிரசாரம் இல்லாமலே காட்சியைப் பார்க்க பெருந்திரள் அங்கு கூடிவிட்டது.

டாக்குத்தர் சும்மா விடவில்லை கடித்தவர் மீது வழக்குத் தொடர்ந்தார். கோர்ட்டுக் குற்றப்பணம் அளித்ததோடு மிருக டாக்குத்தருக்கும் அவரைக் கடித்ததற்காக ஆறு பவுன் கொடுக்குமாறு நீதிபதி தீர்ப்பளித்தார்.

### விசர்நாய் கடித்தது!

மனிதனை மனிதன் கடித்ததைப் பற்றி எழுதும்போது அம்பலாங்கொடையில் நான்கு பள்ளிக்கூடப் பிள்ளைகளை விசர் நாய் ஒன்று கடித்த செய்தி நினைவுக்கு வருகின்றது. பிள்ளைகளை அவசர அவசரமாக அம்பலாங்கொடை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றபோது அங்கு நாய்கடிக்கான மருந்து கிடைக்கவில்லை. தனிப்பட்ட முறையில் வைத்தியம் செய்யும் டாக்குத்தர்களிடமும் இந்த மருந்து கைவசம் இருக்கவில்லை. அந்தப் பிள்ளைகளின் பெற்ரேருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லையாம். அப்பகுதியிலுள்ள ஆஸ்பத்திரிகளை எல்லாம் தரிசித்துவிட்டு ஈற்றில் காலிக்குச் சென்று அங்குள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனராம்.

நாட்டிலுள்ள பல அரசினர் ஆஸ்பத்திரிகளில் முக்கியமான மருந்து வகைகள் 'இல்லை' என்ற குறையை நீக்க அரசினரும் எம். பி. க்களும் முயலவேண்டுமல்லவா?

### நாயும் தின்னுது

பள்ளிக்கூடங்களில் இப்போது இலவசமாக அளிக்கப்பட்டுவரும் 'பனிஸ்' தரத்தில் குறைந்திருப்பதாகவும் நாய்கள்கூட அதைத் தின்ன மறுப்பதாகவும் நாடெங்கணும்

(8ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

சென்ற வருடம் சிம்மாசனப் பிரசங்கத்திலே, கொழும்பிலுள்ள இரு பத்திரிகை ஸ்தாபனங்களின் நிர்வாகத்தையும் மாற்றப்போவதாக அறிவித்திருந்தனர். ஒரு வருடமாகியும் ஏன் ஒன்றும் செய்யவில்லை? என்று ஓர் அன்பர் என்னைக் கேட்கிருர்.

இது அரசாங்கத்தை, பார்லிமெண்டில் கேட்கவேண்டிய கேள்வி. அந்த யோசனையை உலகில் பல பத்திரிகைகள் எதிர்த்தன. இதனல் பரபரப்புமேற்பட்டது. சென்ற முறை சிம்மாசனப் பிரசங்கத்தில் கவர்னர் ஜெனரல் இதை அறிவித்தபோது, நானும் அந்த மண்டபத்தில்தான் இருந்தேன். இரு பத்திரிகை ஸ்தாபனங்களையும் சேர்ந்த ரிப்போர்ட்டர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து அசட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டார்கள். ஆனல் பிற்பாடு ஒன்றையுமே காணுயு.

* * *

அந்த அறிக்கை செய்தபின் புதிதாக ஆங்கிலப் பத்திரிகை ஒன்று வெளியாகியுள்ளது. 'ஈழநாடு'ம் கூட அதன் பிறகுதான் தினசரியாயிற்று. அரசாங்கம் இதை எடுத்துவிட்டால் என்ன செய்வீர்கள்? என்று கூட சில அன்பர்கள் பயமுறுத்தினர்கள்.

இன்னும் இரண்டு வாரங்களில் 'தவஸா' என்ற புதிய சிங்கள தினசரிப் பத்திரிகையும் கொழும்பிலிருந்து வெளியாக இருக்கின்றது. கொழும்பில் இப்பத்திரிகையை விளம்பரப்படுத்தும் பல சுவரொட்டி விளம்பரங்களைக் கண்டேன். அரசாங்கக் கட்சியின் ஆதரவு இப்பத்திரிகைக்கு இருப்பதாகக் கேள்விப்பட்டேன்.

* * *

'லங்கா தீப' பத்திரிகையின் ஆசிரியராக இருந்த திரு. தனபாலா என்பவர்தான் புதிய சிங்களப் பத்திரிகையின் ஆசிரியராம். அவர் இடையிலே 'திவ்வியாஞ' என்ற வாரப் பத்திரிகையை நடத்திவருகிருர். வட இந்தியாவிலே பல ஆண்டுகள் இருந்து கல்வி பயின்றவர். தமிழ்ப் பெண்ணை விவாகம் செய்திருக்கிருர். ஆனல் அவர் நடத்தும் பத்திரிகையில் வகுப்புத் துவேஷத்தை வளர்த்துவிடக்கூடிய கருத்துக்கள் இருந்ததைக் கண்டு வருத்தமும் ஏமாற்றமுமடைந்தேன்.

* * *

புதிதாக வரும் சிங்கள தினசரியும் வகுப்பு துவேஷமூட்டுவதாக இருக்குமோ? என்று விசாரித்தேன். பிரபல புத்தக வியாபாரிகளான குணசேனசன்ஸ்தான் இப்பத்திரிகையை நடத்துவதாயும், வர்த்தக முறையிலேயே இது நடைபெறுமென்றும் கேட்க ஆறுதலாக இருந்தது.

கொழும்பு நோரிஸ் ரோட்டிலே புதிய பெரிய கட்டடம் இதற்காகப் பூர்த்தியாகி ரெடியாக இருக்கிறது. புதிதாக வரும் பத்திரிகை வகுப்பு ஒற்றுமையையும் இலங்கை–இந்திய நட்பையும், உலக சமாதானத்தையும் வளர்க்க உதவியளிப்பதாக இருக்குமென்றே நம்புவோம்.

* * *

"அண்ணாத்துரை காமராஜ் ஆனர்" என்று ஒரு செய்தியைச் சென்னைப் பத்திரிகையொன்றில் பார்த்தேன். விஷயமென்ன தெரியுமா? தேவ கோட்டையில் நடைபெற்ற திராவிடக் கழக மகாநாட்டில், செம்பனூர் சோலைமலை, தன் மகனின் பெயர் அண்ணாத்துரை என்று இருப்பது தமக்குப் பிடிக்கவில்லை என்றும், வேறு பெயர்

(8-பக்கம் பார்க்க)

# தென்னுற்காடு, திருச்சி, தஞ்சையில் காலராபீதி

## தடுப்பு ஊசி போட்டுக் கொள்ள மக்களுக்கு அறிவுறுத்தல்

புதுடில்லி, ஜூலை 14

திருச்சிஞப்பள்ளி; தஞ்சாவூர், தென்னுற்காடு ஆகிய மாவட்டங்களில் வெள்ளம் வருவதாய் அரசாங்க அறிக்கை ஒன்று கூறுகிறது. இவ்விடங்களில் காலரா ஏற்படுமென எதிர்பார்க்கப்படுவதாயும், இதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தபோதிலும் மக்கள் காலரா தடுப்பு ஊசி குத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

முக்கியமாக தங்கள் ஊர்களிலிருந்து வெளியேறியுள்ளவர்கள் ஊசிபோட்டுக்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டிருக்கிருர்கள்.

கொள்ளிடத்தில் ஏற்பட்டுள்ள உடைப்பு இன்று மூடப்பட்டுவிடும் என அறிவிக்கப்படுகிறது. ஓரிடத்தில் 300 அடி உடைப்பு மூடப்பட்டுவிட்டது.

கும்பகோணத்தில் நீர்மட்டம் 3 அடி குறைந்துள்ளது. பவானியிலும், ஈரோட்டிலும் இரண்டரை அடி நீர்மட்டம் குறைந்துள்ளது.

முதன்மந்திரி திரு. காமராஜ், மராமத்துமந்திரி திரு. பக்தவத்சலத்துடன் விமானத்தில் பறந்துசென்று வெள்ளப்பிரதேசங்களைப் பார்வையிட்டார்.

### பூனவில்

பூனவில் வெள்ளம் காரணமாக நகரில்தேங்கியுள்ள தடைகளை அகற்றும் வேலையில் 1000 ராணுவத்தினர் ஈடுபட்டிருக்கின்றனர். நகரை 4 பகுதிகளாகப் பிரித்து இவ்வேலைகள் நடத்தப்படுகின்றன. கார்ப்பரேஷன் கட்டிடத்தில் மத்திய கட்டுப்பாட்டு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. மின்சாரம், தண்ணீர், டெலிபோன், தந்தி ஆகியவற்றில் மாமூல் நிலையை ஏற்படுத்த ராணுவ அதிகாரிகள் சிவில் நிர்வாகத்திற்கு உதவியளித்துவருகின்றனர்.

பூனவில் முட்டாநதி வெள்ளப்பெருக்கின் காரணமாய் 11 பேர் மூழ்கி இறந்துவிட்டதாய் மகாராஷ்டிய சட்டசபையில் அறிவிக்கப்பட்டது.

### கேரளம்

மத்திய மந்திரி திரு. ஹமீஸ் முகம்மது இப்ராஹிம் கேரளத்தில் வெள்ளப்பகுதியைவிமான மூலம் சென்று பார்வையிட்டார், அவருடன் முதன் மந்திரி பட்டம் தாணுப்பிள்ளையும் உடன் சென்ருர். 1 லட்சம் ஏக்கர் நெல்வயல்கள் கேரளத்தில் நீரில் மூழ்கிவிட்டதாயும், 10 லட்சம் வாழைமரங்கள் நாசமாகிவிட்டதாயும் அறிவிக்கப்படுகிறது.

### மைசூர்

மைசூரில் 3 கோடி ரூபாய்க்கு பொருள்நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 5000 குடும்பங்கள் நிர்க்கதியான நிலைமைக்கு உள்ளாகியிருக்கின்றனர். நிலவரியை அரசாங்கம் தள்ளுபடி செய்துவிட்டது.

கிருஷ்ணாநதியில் கடந்த புதன்கிழமை படகில்சென்ற 8 ஸ்திரீகளும், 5 குழந்தைகளும் நீர் வேகத்தினல் இழுத்துச் செல்லப்பட்டு மாண்டனர்.

## ராஜஸ்தானில் வெட்டுக்கிளிகள் படையெடுப்பு

புதுடில்லி, ஜூலை 14

ராஜஸ்தானிலும், குஜராத்திலும் லட்சக்கணக்கான வெட்டுக் கிளிகள் படையெடுத்துள்ளதாய் அறிவிக்கப்படுகிறது. இன்று விமானத்தின் உதவியுடன் வெட்டுககிளி ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## ஆசிரியர்கள் சந்தேகக் கண்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்குரிய வழிவகைகளை டாக்டர்குருகேஎடுத்துரைத்து, போக்கக் கூடிய வகையையும் சொன்னர். திரு. ஏ. கே. சபாபதிப்பிள்ளை பாடசாலை ஒழுங்குபற்றிப் பேசும்போது அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் தாழ்வு நோக்கம் பாடசாலை ஒழுங்கைக் குலைப்பதாக இருக்கிறதென்ருர்.

பாடசாலைத் தேசியமயம் பிள்ளைகளின் தொகையை அதிகரித்ததோடு பாடசாலை நிர்வாகமும் கஷ்டமாகிவிட்டதெனப் பல அதிபர்கள் எடுத்துரைத்தனர்.

டாக்டர் குருகே பதிலளிக்கையில், மற்றைய நாடுகளின் பள்ளிக்கூட நிர்வாகம் சம்பந்தமாக, அதிபர்களுக்கும் கல்வி அதிகாரிகளுக்கும் விசேஷ பயிற்சியளிக்கப்படுகிறது. இங்கு அப்படியில்லை. இங்கேயும் அப்படியான பயிற்சியளிக்கப்படவேண்டுமென்றும் அப்படியானல் இக்குறை நீங்கும் என்றும் சொன்னர்.

## பெனடிக்ட் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

கொழும்பு சென். பெனடிக்ட் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென்றல் கல்லூரிக்குமிடையில் பாஸ்கட் பந்தாட்டப் போட்டி யாழ்ப்பாண சென்றல் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது இதில் பெனடிக்ட் கல்லூரி வெற்றி பெற்றது.

இடைவேளைக்கு முன் சென். பெனடிக்ட் கல்லூரி 24 புள்ளிகளும், சென்றல் கல்லூரி 18 புள்ளிகளும் எடுத்தது.

இடைவேளைக்குப்பின் விளையாட்டு ஆரம்பமானதும் பெனடிக்ட் கல்லூரி வீரர்கள் மிகவும் துரிதமாக விளையாடினர். முடிவில் சென். பெனடிக்ட் கல்லூரி 64 புள்ளிகள் எடுத்தது. 24 எடுத்த சென்றல் கல்லூரியை தோல்வி அடையச் செய்தது.

## விஸாவரியை புனராலோசனை செய்க

### யாழ் மாநகரசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

விஸாவரியைப் மனிதாபிமானத்துடன் புனராலோசனை செய்யவேண்டும் என்று நிதி மந்திரியைக் கேட்டுக் கொள்வதென்றும், யாழ்ப்பாணத்திலிருந்த பாஸ்போர்ட் காரியாலயத்தை மீண்டும் செயல்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுவதென்றும் திரு. துரைராசசிங்கத்தினல் கொண்டுவரப்பட்ட பிரேரணை யாழ்ப்பாணம் மாநகரசபைக் கூட்டத்தில் நிறைவேறியது.

## இந்திய அரசாங்கத்துடன் தோர்னி கிராப்ட் பேச்சுவார்த்தை

### சகலருக்கும் திருப்திகரமாய் முடிந்தது

புதுடில்லி, ஜூலை 14

பிரிட்டிஷ் விமான மந்திரி திரு.தோர்னிகிராப்டுக்கும்,இந்திய மந்திரிகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் எல்லோருக்கும் திருப்தியளிக்கக்கூடிய வகையில் முடிவடைந்ததாக அறிவிக்கப்படுகிறது.

நிதிமந்திரி திரு. மொரார்ஜி தேசாயின் தலைமையில் இந்திய தூதுகோஷ்டிக்கும், பிரிட்டிஷ் மந்திரியின் தூதுகோஷ்டிக்குமிடையே நடைபெற்ற இப்பேச்சுவார்த்தை பற்றி இன்று பிற்பகல் அறிக்கை வெளியிடப்படவிருந்தது.

இப்பேச்சுவார்த்தை எல்லோருக்கும் திருப்தியளிக்கும் வகையில் முடிவடைந்ததாய் திரு. தோர்னிகிராப்ட் நிருபர்களிடம் கூறினர். ஐரோப்பிய பொதுச்சந்தையில் பிரிட்டன் சேர்வதுபற்றி இப்பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

பொதுச்சந்தையில் பிரிட்டன் சேர்வதானல் பாரதத்தின் நலன்கள் கருத்தில்கொள்ளப்படும் என திரு. தோர்னிகிராப்ட் இந்திய மந்திரிகளுக்கு வாக்குறுதியளித்திருக்கிருர் எனக்கூறப்பட்டது. பிரிட்டன் பொதுச்சந்தையில் சேருமானல் பாரதத்தின் ஏற்றுமதி வர்த்தகம் பாதிக்கப்படும் என்றும், பாரதத்தின் ஏற்றுமதி வர்த்தகத்தைப் பாதுகாக்க விசேஷ உடன்பாடு செய்து கொள்ளப்படாவிட்டால் தனது அபிவிருத்தித்திட்டம் பாதிக்கப்படும் எனவும் இந்தியா வற்புறுத்தியது.

இவ்விஷயமாக பிரிட்டன் இன்னும் தீர்மானம் எதுவும் செய்யாவிடினும் ஐரோப்பாவில் பொருளாதார பிளவு பற்றிக் கவலை கொண்டிருப்பதாய் திரு. தோர்னிகிராப்ட் தெரிவித்தார்.

பிரிட்டன் ஐரோப்பிய பொதுமார்க்கெட்டில் சேராவிட்டால் வருங்காலத்தில் பெரும் சிக்கல் ஏற்படுமென்றும், சேர்ந்தாலும் இதர வழிகளில் கஷ்டம் இருப்பதாயும் இரு வழிகளில் எதைத்தேர்ந்தெடுப்பது என்னும் கஷ்டமான பிரச்னை பிரிட்டனை எதிர்நோக்கியிருக்கிறதென்றும் திரு. தோர்ணிகிராப்ட் கூறினர்.

## இலங்கையில் சமதர்ம அரசாங்கம் நிறுவ

### சமசமாஜக்கட்சி 10,000 தொண்டர்களை திரட்டும்

கொழும்பு, வெள்ளி

எல்லாமுன்னேற்றச்சக்திகளின்ஒத்துழைப்புடனும், இலங்கையில் சோஷலிஸ அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டு 10,000 தொண்டர்களைத் திரட்ட லங்கா சமசமாஜக்கட்சி முடிவு செய்திருக்கிறது.

இவ்விதம் முடிவுசெய்த கட்சியின் மத்தியக்கமிட்டி, இலங்கை மக்களின் பொருளாதார, சமூக, கலாச்சார நோக்கம் சம்பந்தமாக 9 அம்சத்திட்டம் ஒன்றையும் வெளியிட்டிருக்கிறது.

இதற்கிடையில் "சமசமாஜபுரம்" என்றபெயரில் மாதிரி நகரம் ஒன்றை அமைக்க இளைஞர் சங்கங்கள் கோரப்பட்டுள்ளன. தங்கள் தங்கள் பகுதிகளிலுள்ள சமூக, கலாச்சார, இதர ஸ்தாபனங்களில் சேர்ந்து இது விஷயமான பல்வேறு விஷயங்கள் பற்றித் தகவல்களை அறிந்துகொள்ளுமாறு அங்கத்தினர்கள் கோரப்பட்டிருக்கிருர்கள்.

## சபையிலிருந்து அங்கத்தினர் வெளி நடப்பு

### யாழ்ப்பாணம் மாநகர சபையில் சம்பவம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாநகரசபைக் கூட்டம் நேற்று மாலை மேயர் திரு. டி எஸ். துரைராசா தலைமையில் நடைபெற்றது.

"மாநகரசபை எல்லைக்குள் ஓர் பொது விளையாட்டு மைதானம் அமைப்பது அத்தியாவசியமாகையால் கொட்டடி அல்லது பண்ணை விளையாட்டு மைதானத்தைத் திரும்பவும் மாநகரசபையிடம் கையளிக்க வேண்டுமென்றும் இல்லையேல் அரசாங்கம் கட்ட உத்தேசித்திருக்கும் கோர்ட்டுக் கட்டிடம் ஆரம்பமாகும்வரையாவது அதனைப் பொது விளையாட்டு மைதானமாக உபயோகிக்க அனுமதி வழங்குமாறு யாழ்ப்பாணம் இணைப்பு அதிகாரியைக் கேட்டுக்கொள்ளப்பட வேண்டுமென திரு. என். தேவபாலசுந்தரத்தினல் கொண்டு வரப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்க நிர்மாண வேலைக்கு ரூபா 20,000 ஒதுக்கவேண்டுமென்ற நிதிக் கமிட்டியின் சிபார்சு திரு. ஏ. ஜி. இராசசூரியரின் எதிர்ப்புடன் நிறைவேறியது.

பழைய இடத்தில் புதிய பஸ் நிலையம் அமைப்பது சம்பந்தமான பிரச்சினையும் திரு. இராசசூரியரின் எதிர்ப்புடன் நிறைவேறியது.

### நாவலர் உருவச் சிலை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் ஞாபகார்த்தமாக ஓர் உருவச்சிலை அமைப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டபோது பண நிலை திருப்திகரமாக இருந்து வசதி ஏற்படின் அமைப்பதுபற்றி பின் ஆலோசிப்பதென முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் திருவாளர்கள்: இராசசூரியர், யேக்கப், தேவபாலசுந்தரம் ஆகியோரது கேள்விகள் ஆங்கிலத்தில் வாசிக்கப்பட்டபோது அதனை எதிர்த்து திரு. துரைசிங்கம் சபையிலிருந்து வெளி நடப்புச் செய்தார். தமிழ் தெரிந்த அங்கத்தவர்கள் இப்படிச் செய்வதைக் கேட்க முடியாதெனச் சொல்லிக்கொண்டு அவர் சென்ருர். திரு. பி. எஸ். சோமசுந்தரமும் சபையின் நடவடிக்கைகள் தமிழில் நடைபெற சில அங்கத்தவர்கள் முட்டுக்கட்டையாக இருப்பதற்கு வருத்தம் தெரிவித்ததோடு நிதிக் கமிட்டி அறிக்கை ஆங்கிலத்தில் இருப்பதற்கும் வருத்தம் தெரிவித்தார்.

திரு. இராசசூரியர் அங்கத்தவர்களுக்கு ஆங்கிலத்தில் பேசும் உரிமை இருக்கவேண்டுமென்றும் மேயர் விரும்பினல் தமது பதில்களை தமிழில் கொடுக்கலாமெனவும் சொன்னர்.

இம்மாதம் 29 ம் திகதி நடைபெறவிருக்கும் 'மாநகர முதல்வர் மகாநாட்டிற்கு' மரவரிப் பணத்தை மாநகர சபைக்குக் கொடுக்கவேண்டுமென்றும், விசேஷ சபையால் வகுக்கப்பட்ட ஒரு முகப்படுத்தப்பட்ட நிதிச் சட்டங்களை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், மோட்டார் வாகன லைசென்ஸ் பணத்தை மாநகர சபையே அறவிட அனுமதி வழங்கவேண்டுமென்றும், முனிசிபல் சட்டங்கள் சிங்களத்திலும்தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டு வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் இடமாறியும் செய்யப்படும் பேறு வருட முடிவில் போதிய அறிவித்தல் கொடுத்தே செய்யப்பட வேண்டுமென்றும் கோரும் பிரேரணைகளை யாழ்ப்பாண மாநகரசபையின் சார்பில் கொண்டுசெல்ல அனுமதி வழங்குவதெனவும் சபைமுடிவு செய்தது.

## "அபிப்பிராயங்களை வெளியிட எங்களுக்கு சுதந்திரம் வேண்டும்"

### கல்வி மந்திரியிடம் ஆசிரியர் சங்கம் வற்புறுத்து

கொழும்பு, வெள்ளி

எந்த ஆசிரியரும் அரசாங்க ஆசிரியராய் இருக்கக் கூடாது என அகில இலங்கை ஆசிரியர் சங்கம் கல்வி மந்திரிக்குத் தெரிவித்துள்ளது.

ஆசிரியர்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடச் சுதந்திரம் இருக்க வேண்டும் என்றும்,அரசாங்கத்தின் கொள்கையைக் கண்டிக்க அவர்களுக்கு உரிமை இருக்க வேண்டுமெனவும் அது கூறியிருக்கிறது.

கல்வி ஆசிரியர்களின் நலன் ஆகியவற்றுக் கெதிராக அரசாங்கத்தின் கொள்கை அல்லது நடவடிக்கை இருக்கக் கூடுமென்றும் இவ்விஷயங்களில் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட ஆசிரியர்களுக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும் என்றும் அது கூறியுள்ளது.

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறை ரோயல் விளையாட்டுக்கழகத்தினருக்கும் யாழ்ப்பாணம் 'சொலிஸ்ரார்' விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையே நடைபெற்ற மென்பந்து கிறிக்கெட் போட்டியில் 'சொலிஸ்ரார்' விளையாட்டுக் கழகம் ஒரு இன்னிங்ஸ் 3 3 ஓட்டங்கள் வெற்றி பெற்றது.



# மாணவர் மலர்



## அறிந்திருந்தால் நல்லது

பாம்பு என்றதும் பலருக்கு பற்பல நினைவுகள் தோன்றலாம். பாம்புக்குக் கையும் காலும் இல்லாதது போலவே அதைப்பற்றிய கருத்துக்களுக்கும் கதைகளுக்கும் பெரும்பாலும் கையும் காதும் இல்லை எனலாம்.

உலகில் நம்முடன் வாழும் உயிரினங்களில், பாம்பினங்கள் மட்டும் சுமார் 2,500 வகையுள்ளன.

பாம்புகளைப்பற்றி விதம் விதமான கதைகள் உண்டு. இதனுடைய உண்மைகள் வியக்கத்தக்கன. ஆசியாவில் உள்ள மலைப் பாம்புகள் ஒரு மானை விழுங்கும் அளவுக்குப் பெரியவைகளாகும். ஆபிரிக்காவில் வாழும் 'மம்பா' என்ற பாம்பு கடித்தால், கண்மூடித் திறப்பதற்குள் மனிதன் இறந்துவிடுவான்.

சிலர் கூறுகின்றார்கள், நாம் ஒரு பாம்பை அடித்தோமானால் அதைத் தொடர்ந்து ஒன்பது வருமென்று. ஆனால் ஒரு பாம்பைக் கொன்றால் அதன் இனங்கள் வருவதுமில்லை. வஞ்சம் தீர்ப்பதுமில்லை. படுகாயப்படுத்தப்பட்ட பாம்பு சூரியன் மறைவதற்குள் உயிர் பெற்று விடுமென்று கூறுவதும் உண்மையன்று. மகுடியின் இசையில் பாம்பு மயங்குவது என்பது உண்மையில் பார்க்கப்போனால் தவறு என்றுதான் சொல்லலாம். காரணம் பாம்புக்கு உண்மையில் காதுகள் கிடையாது.

நஞ்சுள்ள பாம்புகள் கடித்தால் என்ன செய்வது என்பதுபற்றி விஞ்ஞானிகள் கூறிய விதிகளைப் பாருங்கள்.

நச்சுப் பாம்பு கடித்தால், இங்குமங்கும் ஓடாமல், அமைதியாக இருக்க வேண்டும்; பாம்பு கடித்த இடத்திற்கு மேல் ஒரு கயிற்றால் கட்டிவிடலாம். ஆனால் அங்ஙனம் கட்டிய கயிறு இறுக்கமாகவும் இருத்தல் கூடாது. கத்தியைக் கொண்டு கடித்த இடத்திற்கு மேல் அரை அங்குல ஆழத்திற்கு ஒரு குறுக்கு (×) வெட்டு இட வேண்டும். பிறகு காயத்தை அழுத்துவதன் மூலம் இரத்தத்துடன் கலந்த நஞ்சை எவ்வளவு வெளியேற்ற முடியுமோ அவ்வளவு வெளியேற்ற வேண்டும். பின்னர் விரைவிலே ஒரு மருத்துவர் உதவியை நாட வேண்டும்.

## கண்ணனின் ஜூலி

—"மகான்"—

எனது நண்பர்கள் பலவித ஜாதியைச் சேர்ந்த நாய்களை வளர்க்கின்றார்கள். அவற்றையெல்லாம் பார்க்கும்போது "நானும் ஒரு நாயை வளர்த்தாலோ!" என்ற எண்ணம் என் மனதில் தோன்றுவதுண்டு.

எனது நண்பன் கண்ணனிடம் ஓர் நாய் இருந்தது. பிரஜையிலே நாய் இலங்கையாக இருந்தாலும் பார்வைக்கு வெளி நாட்டு நாயாகவே இருந்தது. 'ஜூலி' என்பதுதான் அந்த நாயின் பெயர். ஒரு நாள், கண்ணனின் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கு ஜூலியுடன் கண்ணன் ஏதோ ஆங்கிலத்தில் பேசி விளையாடிக் கொண்டிருந்தான்.

என்னைக் கண்ட கண்ணன் அன்புடன் வரவேற்று, தனது நாயின் ஆங்கிலத் திறமையை எனக்கும் எடுத்துக் கூறினான். ஜூலியின் ஆங்கிலத் திறமையை எனக்கு அடிக்கடி கூறும் கண்ணனின் வார்த்தைகள் ஓரளவு அன்று சரியாகவேயிருந்தன.

ஆஹா...... "கம்...... ஜூலி" என்றதும் துள்ளிக்குதித்து ஜூலி ஓடி வருவதும், "கோ... கோ..." என்று சொன்னதும் அந்த இடத்தை விட்டு அகல்வதுமாயிருந்த காட்சியானது அது ஆங்கிலம் தெரிந்த நாய் என்பதை நிரூபித்து விட்டது. நானும் விஷயத்தோடு விஷயமாக எவ்வித சந்தேகத்திலும் கண்ணயிருந்து விட்டேன். அன்றையப் பொழுதும் அமைதியாய்க் கழிந்தது.

அன்றொரு நாள் ஞாயிற்றுக் கிழமை. நண்பன் கண்ணனைச் சந்திக்கச் சென்ற நான், அவனது அருமை நாயைத்தான் காணமுடிந்தது. கடைத்தெருவுக்குச் சென்றுவிட்டான் என்று கண்ணனின் தாயார் கூறியதும், ஜூலியுடன் விளையாட ஆரம்பித்தேன். ஜூலியும் வாலை ஆட்டிக் கொண்டு என் கால்களை நக்கியது. சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த நான், அந்தஜூலியைப் பார்த்து "...ஜூலி... கோ... கோ..." என்றேன்; அந்த இடத்தை விட்டே ஓடிற்று! பின்னர் "ஜூலி... கம்... கம்..." என்று கத்தினேன்மீண்டும்வந்துவாலை ஆட்டி என் கால்களை நக்கியது. ஒரு சில நிமிடம் கழித்து, ஜூலியைப் பார்த்து, போகும்படி கையினால் சைகை காட்டி, "கம்... கம்..." என்று கத்தினேன். அப்பாடா...! ஒரே ஓட்டம்! அந்த இடத்திலேயே நாயில்லை! சிறிது நேரத்துக்குப் பின்னர், ஜூலியின் அருகில் போய், "கோ... கோ... கோ..." என்று சொல்லி சைகை மூலம் அழைத்தேன். ஆஹா...! என்ன நாய்! அந்த ஆங்கிலம் கற்ற ஜூலி என் கால்களை நக்கியது.

அந்த நாய்க்கு ஆங்கிலம் தெரியாது, சைகையினால்தான் அது அங்குமிங்கும் ஓடுகிறது என்பதை நான் கண்டு விட்டேன். ஆங்கிலம் கற்ற நாய்களின் அருமையையும் அறிந்து விட்டேன்.

## அறிவுச்செல்வம்

★ இப்போதுள்ள சூரிய மண்டலம் முழுவதும் கற்பனைக்கும் எட்டாத வெகு காலத்துக்கு முன்னர் வாயு நிலையில் இருந்தது. வெப்பம் சிறிது சிறிதாக ஆகாய வெளியில் சென்றுவிடவே வாயு குளிரத் தொடங்கியது. இதன் விளைவாக வாயு மண்டலத்தின் சுழற்சி விரைவு அதிகமாகி, வாயு வட்டங்களை அது உமிழ்ந்தது. அவையே இறுதிக்கிரகங்களாக மாறின.

★ பிரிட்டன் வடதுருவ மண்டலத்தை நோக்கி வருடத்துக்கு இரண்டங்குலம் நகர்ந்து கொண்டிருக்கிறது என்று பிரபல விஞ்ஞானி பி. எம். எஸ். பிளாக்கெட் கூறியுள்ளார். இந்தியா, ஆபிரிக்கா போன்ற கண்டங்கள் இப்போது பூமத்திய ரேகை மண்டலத்திலுள்ளன. ஆனால் அவைஒருகாலத்தில் தென் துருவ மண்டலத்திலிருந்தனவாம்.

★ தமிழ் நாட்டில் இப்போது ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் காவிரி நதியிலுள்ள வெள்ளம் அபாயமில்லாத வகையில் வடிந்து விட்டது. காவிரிக்கு ஏன் அந்தப் பெயர் வந்தது என்பது பலருக்குத் தெரியாதிருக்கலாம். கவேரம்என்னும் மலையினின்றும் இழிந்தது என்றும் கவேரன் என்னும் அரசனுக்கு மகள் என்றும் அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

★ கடலில் மீன் இருக்கிறதா என்று கேட்டால், கேட்பவரை முட்டாள் என்றுதான் சொல்லுவீர்கள். ஆனால் மீனில்லாத கடலொன்று இருக்கிறது என்று சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். ஆமாம், இஸ்ரேலுக்ும் அராபியாவுக்குமிடையே பிரமாண்டமான ஒரு ஏரி இருக்கிறது. அதற்கு 'சாக் கடல்' என்று பெயர். அங்கு மருந்துக்குக் கூட மீனில்லையாம். கடல் நீரில் உள்ளதைப் போல் ஆறு மடங்கு உப்பு அதில் இருப்பதால், உயிருள்ள மீனை அதில்போட்டாலும் அந்த மீன் செத்துவிடுமாம்!

★ இன்று எங்கள் வீட்டுச் சமையலோடு மாத்திரம் நின்று விடும் உப்பு, மொத்தம் 1400 விதமாக உபயோகப்படுகிறதாம். ஒரு காலத்தில் உப்பு மிகவும் விலையுயர்ந்த பொருளாக இருந்ததாம்.

★ 1857-ம் ஆண்டில் ஆண்கள் உடையில், பிரிட்டிஷ் இராணுவத்துடன் போராடிய பெண்மணிதான் ஜான்ஸி ராணி.

★ புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட வானொலித் தொலை நோக்கி ஒன்று கதிரவனைச் சுற்றியுள்ள மண்டலத்தை ஆராயப் பயன்படும் எனத் தெரிகிறது. நுண்கலை ஸ்பெக்ட்ரோஹிலியோ கிராப் என்றழைக்கப்படும் அந்தக் கருவியில் 32 'அலை வாங்கி, கருவிகள் பொருத்தப்பட்டு இருக்கின்றன.

★ 'அஸ்ட்ரோலைட்' எனப்படும் ஒரு புதிய பொருளைச் செய்திருக்கிறார்கள். அது எஃகை விட அதிக வெப்பத்தைத் தாங்கும்தன்மையுடையது. அப் பொருள் பிளாஸ்டிக்கையும் கலப்பில்லாத கண்ணாடியையும் கொண்டு செய்யப்பட்டிருக்கிறது.

---

மாணவர்களே!

மாணவர் மலரில் வெளியாகும் கட்டுரைகள், பள்ளிக்கூட மாணவர்களுக்குப் பெரிதும் உபயோகமாக இருக்கிறதெனப் பலர் கடிதங்கள் எழுதியிருக்கின்றார்கள். அவர்கள் அனைவருக்கும் நன்றி.


த. பெ எண். 49
யாழ்ப்பாணம்.

'மாணவர் மலர்'
ஈழநாடு.

---

## அணு என்றால் என்ன?

2,400 ஆண்டுகளுக்கு முன்னர் கிரேக்க வேதாந்தியான டெமாக்கிரடஸ் என்பவர் எல்லாப் பொருள்களும், பிரிக்க முடியாத மிகச் சிறிய துளிகளால் ஆனவை எனக் கண்டு பிடித்தார். உதாரணமாக ஓர் இரும்புத் துண்டை எடுத்துக் கொள்வோம். அதை சிறு சிறு துண்டுகளாக்கி கடைசியில் மிக மிகச் சிறிய நிலைக்குக் கொண்டுவரலாம். கடைசியில். பிரிக்க முடியாத நிலையை அடைந்துவிடும். இந்த மிகச் சிறிய துளிக்கு 'அணு' என்று பெயர். 'Atom' என்றால் 'துண்டிக்க முடியாதது' என்பது கருத்து.



யு. எஸ். தலைவர்கள் ஜோர்ஜ் வாஷிங்டன், தோமஸ் ஜெபர்சன், ரூஸ்வெல்ட், ஆபிரகாம் லிங்கன் ஆகியோரின் உருவச்சிலைகள். இச்சிலைகள் சிக்காகோவில் உள்ள கோல்புவ் விளையாட்டு மைதானத்தில் நிறுவப்பட்டுள்ளன.

## வெள்ள நிவாரண உதவி

### குன்றக்குடி அடிகள் ரூ. 8000 கொடுத்தார்

தஞ்சாவூர், ஜூலை 14

தஞ்சாவூரில் வெள்ளத்தினால் அவதிப்படும் மக்களை குன்றக்குடி அடிகளார் சென்று பார்த்து ஆறுதல் கூறினார். வெள்ள உதவி வேலைகளுக்குஏழாயிரம் ரூபாய் கொடுத்தார்.

கும்பகோணத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆயிரம் ரூபாவும் 100 மூட்டை அரிசியும் குன்றக்குடி அடிகளார் வழங்கினார்.

வெள்ளத்தில் துன்பப்படும் மக்களுக்கு அரசியல் கட்சிகள் வேறுபாடு காட்டாமல் கண்ணியத்தோடு மனிதாபிமானம் கொண்டு உதவ வேண்டுமென்று குன்றக்குடி அடிகளார் கேட்டுக்கொண்டார்.

பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு அரசாங்கம் 30 ரூபாய் கொடுப்பது போதாதென்றும் 50 ரூபாயிலிருந்து 200 ரூபாய் வரை உதவ வேண்டுமென்றும் அவர் கூறினார்.

விதை உரம் முதலியவற்றை இப்பொழுதே சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்றும் வெள்ளத்தினால் உருவழிந்து கிடக்கும் வயல்களைச் சீர்திருத்த இராணுவத்தைப் பயன்படுத்த வேண்டுமென்றும் குன்றக்குடி அடிகளார் கூறினார்.


தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்

33
303 ஊதுபத்திகளை
3003

உபயோகியுங்கள்.

யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.

தயாரிப்பவர்கள்:
எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்-2.

சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெகலை.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**சனி 15-7-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 ஒலிபரப்பு முடிவு.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை, 1-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-10 விலைவாசிகள், 6-15 கிராமசஞ்சிகை, 6-15 பரமேஸ்வரி சுவாமிநாதன் - வயலின்

இரவு 7-15 நேயர்கடிதம், 7-30 கே. ஆர். நடராசா - பாட்டு, 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 அறிவுச்சுழல் இல: 101, 9-45 பாமாலை, 10-00 நேயர் விருப்பம், 10-30 ஒலிபரப்பு முடிவு.

**ஞாயிறு 17-7-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 கிறிஸ்தவ கீதங்கள், 8-30 ஞான - அஞ்சலி, 9-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-30 கதம்ப இசை, 11-30 சிறுவர்மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம், 1-00 மாதர்பகுதி, 1-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிரேன் மணி பொன்னுத்துரை பாட்டு, 5-45 திரைக்குரல், 6-10 குரல் இசை, 6-30 தாளவாத்தியக் கச்சேரி.

இரவு 7-00 மாதர் கேட்டவை, 7-15 கண்டதும் கேட்டதும், 7-30 ஏ. எம். சம்சுதீன் - பாட்டு, 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 'ஸ்திரிசாகசம்' - நாடகம், 9-45 தேர்ந்த இசை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்).

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

**சனி 15-7-61**

காலை 7-00 இசைக்கதிர், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 தஞ்சாவூர் எஸ். கோதண்டராமன் - வயலின்,

பகல் 1-00 துதிப்பாடல்கள், 1-20 பிள்ளைக்கனியமுது, 1-30 வாத்தியஇசை, 1-50 குரல் இசை, 2-10 தஞ்சாவூர் எஸ். கோதண்டராமன் - வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'மாய்ந்தவர்கள் பேசமாட்டார்கள்' - நாடகம், 8-00 திரைப்படஇசை, 8-40 இசைமாலை, 9-30 அகிலபாரத சங்கீதம்.

**ஞாயிறு 17-6-61**

காலை 7-00 இசைக்கதிர், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 மாயூரம் டி. கே. தங்கமணி - பாட்டு, 8-15 இஞ்சிக்குடி பிச்சைக்கண்ணு சகோதரர்கள் - நாகஸ்வரம்.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை, 12-30 சூரியகாந்தி - கதம்ப நிகழ்ச்சி, 1-00 மணிமலர், 1-50 வாத்தியஇசை, 2-10 பெண்ணுலகம், 2-30 மெல்லிசை, 3-00 டி. ஆர். கிருஷ்ணமாச்சாரி - வீணை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 தஞ்சாவூர் எல். வேங்கடேசன் - பாட்டு, 8-30 மாயூரம் டி. கே, தங்கமணி - பாட்டு, 9-15 வாத்தியஇசை, 9-30 டெல்லி அஞ்சல், 9-45 ஆகாஷ்வாணி - ஒலிப்பதிவுகள்.

# அரசாங்கத்தின்மீது நம்பிக்கையில்லாப்பிரேரணை

## யு. என். பி. கொண்டுவரும்

கொழும்பு, வெள்ளி

யு. என். பி.யினது பன்னிரண்டாவது வருடாந்த மகாநாடு நாளையும், அடுத்த நாளும் ஸ்ரீகோதாவில் நடைபெறும். அப்போது அரசாங்கத்தின் மீது நம்பிக்கைலல்லாத் தீர்மானம் கொண்டுவரப்படுவது பற்றி ஆராய்யபடும்.

பின்வரும்காரணங்களுக்காக அரசாங்கத்தின்மீது யு. என். பி. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவரவிருக்கிறது.

1. இந்தியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணுவதில் தாமதம் ஏற்படுவதால், சட்டவிரோதமாகப் பலர் குடியேறி நாட்டு மக்களுக்கு அல்லல் விளைவிக்கின்றார்கள்.

2. யு. என். பி. ஆரம்பித்த திட்டங்களைத் தடைசெய்வதோடு புதிதாக எந்தவிதமான திட்டங்களையும் ஆரம்பிக்காதிருத்தல்.

3. நாட்டின் தேசியச் செல்வமான இளைஞர்களின் நம்பிக்கையை நாசமாக்குதல்.

4. வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினைக்குத் தீர்வுகாணுவதற்குப் பதில் வேலையில் உள்ளவரையும் வேலையை இழக்கச் செய்வது.

5. அரசாங்க நிர்வாகத்தில் அரசியல்வாதிகள் தலையிட்டுக் குழப்பம் விளைவிப்பது.

6. லஞ்சம் வாங்கியவர்களுக்கு பாதுகாப்பளித்து அரசியலைக் கெடுத்தல்.

7. எதிர்க் கட்சியினரை வஞ்சம் தீர்க்கும் மனப்பான்மையுடன் தாக்குதல்.

வெளிநாட்டில் இருந்துகிடைக்கும் வருமானத்தை வீணகச் செலவுசெய்து எந்தவிதமான அபிவிருத்தித் திட்டமுமின்றிப் பெருங் கடன் எடுத்து நாட்டைப் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு இழுத்துச்சென்றதுபற்றியும் மகாநாட்டில் ஆராயப்படும்.

## உலக நெருக்கடிக்கு சோவியத்யூனியனே காரணமாம்

வாஷிங்டன் ஜூலை 13

இன்றைய உலக நெருக்கடிகள் பலவற்றிற்கு ரஷ்யாவின் உடன்படிக்கைகளும், வாக்குறுதிகளுமே காரணம். ஏனெனில் ரஷ்யா மனிதனின் துக்ககரமான வரலாற்றைப் போன்றதொரு சர்வாதிகாரத்தை விருத்தி செய்வதில் முனைந்துள்ளது."

தேசிய பத்திரிகையாளர் சங்கத்தில் பேசிய ராஜாங்க காரியதரிசி திரு. டீன் ரஸ்க் சர்வதேச கெடுபிடி நிலைமைகள் பற்றி ஆராய்ந்து அதற்கான காரணங்களை தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடடார்.

தொடர்ந்து பேசுகையில் எமது சந்ததியினருக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமைக்குரிய அடிப்படைக் காரணம் யாதெனில் "சோவியத்து யூனியன் மனமார்ந்த விருப்பத்துடன் ஐ. நா. வில் அங்கத்துவ நாடாக சேரவில்லை. உலக மகாயுத்தத்தின் மத்தியில் எம்முடன் இதில் சேரவேண்டிய நிர்ப்பந்தம் ரஷ்யாவுக்கு ஏற்பட்டது" என்றார்.

பதவி வேட்கையினல் மனித சமுதாயத்தை ஒடுக்குவதற்கேற்ற முறையில் சட்ட திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளது என்றும் திரு. ரஸ்க் குறிப்பிட்டார்.

# கலியாணமாகி நான்கு மாதம்கூட ஆகவில்லை

## 22 வயது காளைக்கு மண்சுவர் காலனாக மாறியது

சுன்னாகம், சனி

மணமாகி நான்கு மாதந்தானும்பூர்த்தியாகாதவாலிபர் ஒருவரின்மேல் மண்சுவர் இடிந்து விழுந்து இளமனைவியிடமிருந்து அவரைப் பிரித்தெடுத்த பரிதாபகரமான சம்பவமொன்று சுன்னாகத்தில் நடைபெற்றது. சுன்னாகம் கல்லாக்கட்டுவனைச் சேர்ந்த சின்னத்தம்பி சுப்பிரமணியம் என்ற 22 வயது வாலிபர்மீது மண்சுவர் இடிந்து விழுந்ததினல் இச்சம்பவம் நிகழ்ந்தது. ஆபததான நிலையில் ஆஸ்பத்திரிற்கு எடுத்துச்செல்லப்பட்டு 2 மணிநேரத்துள் அவர் மரணமானார்,

சின்த்தம்பி சுப்பிரமணியத்தின் மரணம்பற்றி திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினர்.

திரு. எம். கிருஷ்ணன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது

இறந்தவரும் நானும் மற்றும் மூன்றுபேருமாக பழைய மண் வீடொன்றை இடித்துக்கொண்டு நின்றோம். புதிதாக வீடொன்றைக் கட்டும்பொருட்டே இப்பழைய வீடு இடிக்கப்பட்டது. மேல் கூரையைப் பிடுங்கி எடுத்து அகற்றிவிட்டு ஒரு சிறு சுவரை இடித்துக் கொண்டு நின்றோம். அப்பொழுது பெரிய சுவர் இடிந்துவிழுந்தது. அது இறந்தவருக்குமேல் விழுந்தது. உடனடியாகப் பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம். 2 மணி நேரத்தின் பின் அவர் அங்கு மரணமானார்

டாக்டர் செல்வி கே. கந்தசாமி பிரேத பரிசோதனை நடத்தினர். சுவர் விழுந்ததைத்தொடர்ந்து ஏற்பட்ட அதிர்ச்சியினல் மரணமேற்பட்டதென்று அவர் தெரிவித்தார்.

திடீர்மரண விசாரணை அதிகாரி விபத்தினல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

## அரபு லீக்சபை கூட்டம் ஒத்திவைப்பு

கெய்ரோ, ஜூலை 14

அரபு லீக்கில் அங்கத்துவம் கோரி குவாயத் செய்திருந்த மனுவைப் பரிசீலனை செய்வதற்காக நேற்று மீண்டும் கூடிய அரபு லீக்சபைகுவாய்த்தின் அங்கத்துவம்பற்றி எவ்வித முடிவும் செய்யாமல் ஒரு வார காலத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் பத்து அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பிரதிநிதிகள் ஒவ்வொருவரும் தங்கள் அரசாங்கங்களுடன் கலந்தாலோசனை செய்து கொள்வதற்கு அவகாசமளிக்கும் நோக்கமாக கூட்டம் ஒரு வாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதென்று அரபு லீக்சபைப் பொதுக் காரியதரிசி தெரிவித்தார்.

குவாய்த்தைத் தனி சுதந்திர நாடாக அங்கீகரிக்கக்கூடாதென்றும் குவாய்த்தை அரபு லீக்கில் ஒரு அங்கத்துவ நாடாகச் சேர்த்துக் கொள்ளக்கூடாதென்றும் ஈராக் கேட்டிருந்தது.


பீ. சீ. சீ.

**வெகுமதித் திட்டம்**

பீ. சி. சீ. தயாரிப்புச் சவுக்காரங்களின் சித்திரத் தாள் பெட்டிகளையும் சுற்றுத்தாள்களையும் சேர்த்து வைத்து இந்த வெகுமதித் திட்டத்தில் பங்கு பற்றி உங்கள் அதிர்ஷ்டத்தைப் பெறுங்கள்.

★ ஆடவர்கள் முதல் ஆரணங்குகள்வரைபாவிப்பது நறுமணம் கமழும் பீ.சீ.சீ. சந்தண சோப்பே.

பீ. சி. சீ. சவரின் பார் சோப்

★ சிரமமின்றி உங்கள் துணிகளை வெண்மையாக வெழுக்க இதோ உங்களுக்கு ஓர் அற்புத சலவைச் சோப்.

என்றும் எநநேரமும் பாவிக்க பீ. சீ. சீ. தயாரிப்புக்களை மறவாதீர்கள்

விபரங்களுக்கு:

யாழ்ப்பாணம் ஏஜெண்ட்ஸ்

**முகம்மது அலி அப்துல் அலி,**

பெரியகடை, போன்: 515 யாழ்ப்பாணம்.



வெள்ளியை வென்ற தோற்றம்

பொன்னைப் போல் உயர்ந்த மாற்று

பெணகளுக் குகந்த பாத்திரம்

பவுண் மார்க் அலுமினிய பாத்திரம்

**டொலர்**

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD. DOLLAR BRAND

பவுண் மார்க்

**அலுமினியப் பாத்திரங்கள்**

இலங்கை எங்கும் கிடைக்கும்

**அலுமினியம் இன்டஸ்ரீஸ் லிமிட்.,**

மாவிட்டபுரம் :: யாழ்ப்பாணம்

J. D. 2

# வான்களை நிறுத்தி பொலிசார் பதிவு செய்கின்றனர்

## புதிய சட்டம்; வழக்கு தொடரப்படலாம்?

யாழ்ப்பாணம், சனி

சாரதி உட்பட எட்டுப்பேர்களுக்குமேல் பிரயாணம் செய்யும் தனிப்பட்ட மோட்டார் வான்களை தடுத்து நிறுத்தி பதிவு செய்வதில் பொலிசார் இப்பொழுது ஈடுபட்டுள்ளனர். சாரதி உட்பட எட்டுப்பேர் மாத்திரமே ஒருவானில் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படுமென்ற புதிய (மோட்டார் போக்குவரத்து திருத்த) சட்டத்தையும் பொலிசார் விளக்கிக் கூறுகின்றனர்.

இச் சட்டத்துக்கு மாருக அதிக பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் வான் சொந்தக்காரர்கள் மீது விரைவில் வழக்குத் தொடரப்படலாமெனவும் கூறப்படுகிறது.

வீதியில் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் ஒரு மோட்டார் வானில் சாரதி உட்பட எட்டுப் பேர்களுக்கு மேல் இருக்கக் காணப்பட்டால், அந்த வானின் சாரதி மோட்டார் போக்கு வரத்து திருத்தச் சட்ட விதிகளை மீறியதற்குக் குற்றவாளியாவார்.

அந்தக் காரில் தனியான ஆசனத்தில் அமராத மூன்று வயதுக்குட்பட்ட குழந்தை ஒரு ஆள் ஆகக் கணக்கெடுக்கப் படமாட்டாது. மூன்று வயதுக்கு மேற்பட்டு 12 வயதுக்குட்பட்ட இரு குழந்தைகள் ஒரு முழு ஆளாகக் கணக்கெடுக்கப்படும். என்று புதிய சட்ட விதிகள் கூறுகின்றன.

## கலாச்சார மறுமலர்ச்சி

### நீதியரசர் கண்டனம்

காலி, வெள்ளி

"கலாச்சார மறுமலர்ச்சிதேவையென நம்நாட்டில் நன்கு பேசப்படுகின்றது. ஆனுல் உண்மையாகப் பார்க்கப் போனுல் இத்துறையில் எதுவித முன்னேற்றத்தையும் நான் காணவில்லை. இந்த நாட்டில் மக்கள் கொலை செய்யப்படுகின்ருர்கள். மற்றவரின் உயிர் வாழ்வுக்காக ஒரு சிறிதளவாவது யாரும் அக்கறைப்படுவதில்லை"

இவ்வாறு நீதிபதி திரு. டி. எஸ். பெர்னுண்டோ ஒரு வழக்கைத் தள்ளும்படி செய்து தீர்ப்புக்கூறுகையில் தெரிவித்தார்.

ரொனடுவாவைச் சேர்ந்த எச். வி. சோமதாஸா (25) என்பவரை சென்ற வருடம் ஜூலை 20-ந் திகதி கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு, கே. செராணி, கே. ஸ்ரீ பாலா, ஓ. பொரொலிஸ் அப்புஹாமி, ஏ. ஸ்ரீசேன, ஏ ஜேமிஸ் அப்புகாமி ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்கையிலேயே மேற்கண்டவாறு நீதிபதி கூறினர்.

## "கிராமங்கள் தோறும் தவறணைகளை நிறுவவும்"

### மந்திரிக்கு சங்கம் மகஜர்

வத்தளை, வெள்ளி

உள்நாட்டு அமைச்சருக்கு, வத்தளை பொருளாதார சங்கம் சமர்ப்பித்துள்ள மகஜரொன்றில், ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு தவணையை நிறுவும்படியும், கள்ளு இறக்குவதற்கான அனுமதியை வழங்கும்படியும் கேட்டுள்ளது.

'கசிப்பு' உற்பத்தியை சட்டங்கள் மூலமாக தடுக்க முடியாதென்றும் ஆனுல் கள்ளு உற்பத்தியை அதிகரித்து, ஒரு கிளாஸ் சுத்தமான கள்ளை மகிழ்ச்சியுடன் அருந்துவதற்கான வாய்ப்பை அளிப்பதின் மூலம் 'கசிப்பு' உற்பத்தியை தடைசெய்யலாம் என்று சங்கம் கருதுகின்றது.

'கசிப்பு' தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் பொலிஸ் அதிகாரிகள் முழு சிரத்தையுடனும் ஈடுபட்டால், 'கசிப்பை' தடைசெய்து விடலாமென்றும் சங்கம் கேட்டுள்ளது.

ஜூரிமார்கள் குற்றவாளிகளல்ல என்பதால் தாம் அவர்களை விடுதலை செய்ய வேண்டியுள்ளதாக நீதிபதி எதிரிகளுக்குத் தெரிவித்தார்.

## மூன்று மொழிகளிலும் அறிவித்தல் பலகை

### இ. போ. ச. நடவடிக்கை

கொழும்பு, வெள்ளி

முக்கியமான பஸ் நிற்குமிடங்களில் அறிவிப்புப் பலகைகள் நாட்டுவதற்கு இலங்கைப் போக்குவரத்துச்சபை நடவடிக்கை எடுக்கின்றது. முதலாவதாக அறிவிப்புப் பலகை காலி வீதிகளில் ஏற்படுத்தப்படும். முக்கோண வடிவமுள்ள அப்பலகைகளில் அறிவித்தல்கள் மூன்று மொழிகளிலும் ஒட்டப்பட்டிருக்கும். பஸ்ஸினுடைய ரோட்டு நம்பர்கள், புறப்படும் இடம், சென்றடையும் இடம், முக்கிய பஸ் தரிப்புகள், பஸ் புறப்படும் நேரங்கள், அடையும் நேரங்கள் ஆகியவை அறிவித்தல் பலகையில் எழுதப்பட்டிருக்கும்.

அறிவித்தல் பலகைகள் உறுதியான உலோகத்தால் செய்யப்பட்டிருக்கும் என இ. போ. ச. அதிகாரி ஒருவர் கூறினர்.

## முன்னேற்பாடு இன்றி சந்திக்க முடியாது

கண்டி, வெள்ளி

கல்வி மந்திரி, நிரந்தரக் காரியதரிசி அல்லது வேறு அதிகாரிகளைச் சந்திப்பதற்கு இனிமேல் முன்னேற்பாட்டுடன் மட்டுமே ஆசிரியர்கள் அனுமதிக்கப் படுவார்கள் என்று தலைமை ஆசிரியர்களுக்கு கல்வி அதிகாரி அனுப்பியுள்ள சுற்றறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

## இரத்தின கம்பளம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரேபுகார். வெலிகாமத்தைச் சேர்ந்த சில மாணவர் இந்த பனிஸைத் திரும்பியும் பார்க்க மறுத்துவிட்டனராம். அதனைச் சாப்பிட்டால் வயிற்றுக் கோளாறு உண்டாவதாக அவர்கள் கூறியதைக் கேட்ட பெற்ருேர் அந்தப் பனிஸ்களை வீட்டிற் சோதித்துப் பார்த்த போது அவற்றில் பூச்சி புளுக்கள் இருந்ததாகவும், அவை நன்கு வேகவில்லையென்பதையும் அறிந்து கொண்டனர். அவற்றை நாய்கள்கூடத் தின்ன மறுத்துவிட்டன வென்ருல் பாருங்களேன்!

o

### ஆடிப்பிறப்பு

ஞாயிற்றுக்கிழமை ஆடிப்பிறப்பு. ஆடிப்பிறப்பென்றதும் நவாலியூர், சோமசுந்தரப் புலவரின் பாடல்தான் அனைவருக்கும் நினைவில் உதிக்கும். 'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம், ஆனந்தம் தோழர்களே!' என்ற பாடலை நினைக்கும் போதே நாவில் ஜலம் ஊறுகின்றது. அப்புறம் கொழுக்கட்டையின் சுவையைப் பற்றியும் இதமான கூழைப்பற்றியும் கூறவும் வேண்டுமா?

இச் சந்தர்ப்பத்தில் ஆடி விதைதேடி விதை என்பதையும் நினைவூட்ட விரும்புகின்றேன். உணவுப் பொருள் விருத்தியின் அவசியத்தை இம் முதுமொழி உணர்த்தி வைக்கின்றதல்லவா?

## வீடு கட்டுவதற்கு ஊக்கமளிக்கத் திட்டம்

### மலிவான விலையில் வீடமைப்பு உபகரணங்கள் கிடைக்க முயற்சி

கொழும்பு, வெள்ளி

சொந்தத்தில் வீடுகட்டுவோருக்கு ஊக்கமளிக்கக்கூடிய திட்டமொன்றை உருவாக்கும்படி தேசியவீடமைப்புஇலாகா அதிகாரிகளை, ஸ்தலஸ்தாபன வீடமைப்பு மந்திரி திரு. மகாநாம சமரவீர கேட்டுள்ளார்.

தமக்குத் தேவையான வீடுகளைக் கட்டிக்கொள்ளும்படி பெருந்தொகையான மக்களை ஊக்குவிக்க அரசாங்கம் கருதுகிறது எனச் சில அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கொழும்பிலும் இதர பகுதிகளிலுமுள்ள வீட்டுத் தேவைகளை ஓரளவு நிவர்த்தி செய்யும் நோக்கமாகவே அரசாங்கம் இக் கொள்கையைக் கடைப்பிடிக்க உத்தேசித்துள்ளது.

வீடுகட்ட விரும்புவோருக்கு ஏழுவருஷம் அல்லது அதற்குக் கூடிய காலத்திற்கு வருமான வரியில் சலுகைகள் விதிப்பது பற்றியும் வீடமைப்பு இலாகா அதிகாரிகள் பரிசீலனை செய்வர். வீடுகட்டுவதற்குத் தேவையான பொருட்களைக் குறைந்த விலைக்குப் பெற்றுக்கொள்வதற்கு வீடமைப்பு இலாகா என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதுபற்றியும் இவ்வதிகாரிகள் ஆராய்வர். தனிப்பட்ட வியாபாரிகளிடம் அதிக பணச்செலவில் வீடமைப்புக்கான பொருள்களைவாங்காது, குறைந்த விலையில் இவ் இலாகாவிடமிருந்தே வாங்கிக் கொள்ளக்கூடிய வசதியளிக்க இலாகா திட்டமிட்டுள்ளது. வீடுகட்டுவோருக்குத் தற்போது சிமெந்து மட்டுமே பாக்கெட் ஒன்று 8 ரூபாய் விலைக்கு வீடமைப்பு இலாகா கொடுத்துதவுகிறது. வீட்டுக்குத் தேவையான மரங்கள், ஓடு, கூரைக்குதவும் தகடுகள் போன்ற பிறவற்றையும் குறைந்த விலையில் உதவ இலாகா தீர்மானித்துள்ளது.

வீடுகட்டுவதற்கு அதிக கடன் உதவவும் இலாகா விரும்புவதாகத் தெரியவருகிறது.

இது சம்பந்தமாக மத்திய வங்கி 2 கோடி ரூபாவை வீடமைப்பு இலாகாவிற்கு உதவ இருக்கிறது.

சிறிய வருவாய் உள்ளவர்கள் வீடுகட்டுவதற்குப் பணம் உதவுவதற்கான திட்டங்களையும் இலாகா உருவாக்கிவருகிறது.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கவேண்டுமென்றும் ஈ. வே. ரா. பெரியாரைக் கேட்டாராம். "காமராஜ்" என்று நாமம் சூட்டிய பெரியாருக்கு, பையனின் தகப்பனுர் இரண்டு ரூபாய் கொடுத்ததாக அச் செய்தி கூறுகிறது! இந்தப் பெயராவது மாருமலிருக்க வேண்டும்.

* * *

சென்னை முதல் மந்திரி காமராஜருக்கு நாளை 59 வது வயது பிறக்கிறதாம். காமத்தை ஜெயித்தவர் காமராஜ். பெயருக்கேற்ப அவர் பிரம்மச்சாரி. அவர் நீடூழி வாழ்க!

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெம்பிளி (கண்டி)

நவா (கொம்பனித்தெரு) மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கேலியா)

ஜெமினி கணேசன், பத்மினி
கே. ஏ. தங்கவேலு, மனேரமா
எஸ். நடராஜன்

மற்றும் பலர் நடித்த

மதுரம் பிக்சர்ஸ்



மீண்ட சொர்கம்

கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்

பின்னணி: ஏ. எம். ராஜா, சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, எம். எல். வசந்தகுமாரி

மக்கள் கண்குளிர, இதயம் மகிழ, கலையும், பண்பும் இணைக்கப்பட்ட அருமையான அமைப்பு

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 5-15 மணிக்கு மட்டும்
சனி, ஞாயிறு காலை 10 மணி பி. ப. 1-30 மாலை 5-15 மணிக்கும்

ஜெமினி கணேசன் - அஞ்சலிதேவி
நடித்த
கணவனே கண்கண்ட தெய்வம்

மனேஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30 மணிக்கும் மாலை 5-30மணிக்கும்

ஜெமினி கணேசன் — சாவித்திரி
நடித்த
குணசுந்தரி

தினசரி பி. ப. 2 மணிக்கும் 3-45 மணிக்கும்
வைல்ட் ஸ்ட்ரேபறிஸ்
(ஆங்கிலம்)
WILD STRABERRIES

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.